Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

FRIDAY, JULY 09, 2021

வெள்ளிக்கிழமை ஜூலை 9, 2021 | ஒளி: 07 கதிர் 43 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE

அமைச்சரவை அந்தஸ்துள்ள

# அமைச்சர்கள்; 29ஆக அதிகரிப்பு

**பதவிப்பிரமாணத்துக்குப் பின் சத்தியப்பிரமாணம்**

**சகோதரர்கள் இருவரும் அமைச்சைப் பகிர்ந்தனர்**

**சபையில் முன்வரிசையில் ஆசனம் ஒதுக்கீடு**

**சபைக்குள் இருவகையான வணக்கம் செலுத்தினார்**

**அமைச்சரவைக்குள் ஐந்து ராஜபக்‌ஷர்கள் உள்ளனர்**

**51 நிறுவனங்கள் அவரின் கீழே உள்ளன**

அமைச்சரவை அந்தஸ்துள்ள 29ஆவது அமைச்சராக, பெசில் ராஜபக்‌ஷ, பதவிப்பிரமாணம் செய்துகொண்டார். அவருக்கு நிதியமைச்சர் பதவி வழங்கப்பட்டுள்ளது. இதற்கு முன்னர், நிதியமைச்சராக பிரதமர் மஹிந்த ராஜபக்‌ஷ பதவி வகித்தார்.

தொடர்ச்சி P2







## கைதுக்கு எதிராக ஐ.தே.க வழக்கு



இலங்கையில் அமுலிலில் இருக்கும் தனிமைப்படுத்தல் சட்டத்தின் கீழ், எதிர்ப்பு நடவடிக்கைகளை முன்னெடுப்பதை தடை செய்வதற்கும் அதில் கலந்துகொள்ளும் நபர்களைக் கைதுசெய்வதற்கும் முடியாதென, இதற்கு முன்னர் ஐக்கிய தேசியக் கட்சியின் நீதிப்பிரிவுக்கு காரணங்கள் முன்வைக்கப்பட்டதாக ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க எம்.பி சுட்டிக்காட்டியுள்ளார்.

தொடர்ச்சி P2

## ‘ஜூலை மூன்றாவது வாரம் ‘அஸ்ட்ரா செனகா’ கிடைக்கும்’



நாட்டுக்குத் தேவையான அஸ்ட்ரா செனெகா தடுப்பூசிகள், ஜூலை மூன்றாவது வாரம் கிடைக்கவுள்ளன என தெரிவித்துள்ள கொழும்பு மாநகர மேயர் ரோசி சேனநாயக்க, இரண்டாவது டோஸாக பைசர் தடுப்பூசியை வழங்குவது இடைநிறுத்தப்பட்டுள்ளதாக அறிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

## இரண்டு இராஜாங்க அமைச்சுகள் மறுசீரமைப்பு





இராஜாங்க அமைச்சுகள் இரண்டு மறுசீரமைப்பு செய்யப்பட்டுள்ளன. அவற்றுக்கான இராஜாங்க அமைச்சர்கள், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷ முன்னிலையில், நேற்று (08) பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் வைத்து பதவிப்பிரமாணம் செய்துகொண்டனர். அந்த வகையில், சேதனப் பசளை உற்பத்தி மேம்பாடு, விநியோக ஒழுங்குப்படுத்தல், நெல் மற்றும் தானிய

தொடர்ச்சி P2

## கம்பியால் கட்டிவைத்து மகனை அடித்த தந்தை கைது

■ மஹிந்தகுமார்



பலாங்கொடை பின்னவல கெப்போக் கீழ் பிரிவு தோட்டத்தில் 8வயது சிறுவனை கட்டிப் போட்டு அடித்து துன்புறுத்திய தந்தை, பலாங்கொடை பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரின் மனைவி தனது 7 மற்றும் 8 வயதுடைய இரண்டு மகன்களையும்

தொடர்ச்சி P2

## சகலரின் ஒத்துழைப்பையும் கேட்டார் நிதியமைச்சர் பெசில்



ஜனாதிபதி, பிரதமர் ஆகியோரின் வழிநடத்தலில் சகல மக்கள் பிரதிநிதிகளின் ஒத்துழைப்பு தமக்கு அவசியம் என தெரிவித்த நிதியமைச்சர் பெசில் ராஜபக்‌ஷ, ஜனாதிபதி, பிரதமர் உள்ளிட்ட அரசாங்கத்திலுள்ள அனைவருக்கும் என்ன பிரச்சினை என்பது குறித்து தெளிவு உள்ளது என்றார்.

“ஒரு தந்தையைப் போல கசப்பான விடயங்களை சிலவேளைகளில் செய்ய வேண்டி வரும். எனினும் அந்த விடயங்கள் நேர்மையாக மக்களுக்காக செய்யும் வேலைகளாக நாம் நினைக்கிறோம்” என்றார்.

தொடர்ச்சி P2

## 15 வயதான சிறுமி விவகாரம்: விளம்பரம் செய்தவர் கைது

15 வயதான சிறுமியை பாலியல் நடவடிக்கைகளுக்காக இணையத்தளத்தின் ஊடாக விற்பனை செய்யப்பட்ட விவகாரம் தொடர்பில் மற்றுமொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

தொடர்ச்சி P2

## ஆர்ப்பாட்டத்தில் அள்ளிய 31 பேருக்கும் பிணை



பாராளுமன்றத்தில் நேற்று (08) சமர்ப்பிக்கப்பட்ட, ஜெனரல் சேர் கொத்தலாவல தேசிய பாதுகாப்புப் பல்கலைக்கழகச் சட்டமூலத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களில் பொலிஸாரினால் கைது செய்யப்பட்ட 31 பேரும், நீதிமன்றத்தின் ஊடாக பிணையில் விடுதலைச் செய்யப்பட்டுள்ளனர்.

தொடர்ச்சி P2

## சஹ்ரானின் வகுப்பில் பங்கேற்றவர் கைது

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களின் தற்கொலைதாரியான சஹ்ரான் ஹாசிம் மற்றும் அவரை பின்தொடந்தவர்களால் நடத்தப்பட்ட அடிப்படைவாத வகுப்புகளில் கலந்துகொண்ட மற்றுமொருவர் நாரம்மல பகுதியில் வைத்து நேற்று(8) வியாழக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

தொடர்ச்சி P2

## தேர்தல் முறைமைக்கு 115 முன்மொழிவுகள்



தேர்தல் சட்டங்கள் மற்றும் தேர்தல் முறைமையில் மறுசீரமைப்புகளை மேற்கொள்வதற்காக நியமிக்கப்பட்டுள்ள பாராளுமன்ற விசேட குழுவுக்கு 115 முன்மொழிவுகள் மற்றும் யோசனைகள்

தொடர்ச்சி P2

## ரணில் எம்.பி தனது பயணத்தை ஆரம்பித்தார்

ஐக்கிய தேசியக் கட்சியின் எதிர்கால பயணம் தொடர்பில், பாராளுமன்ற உறுப்பினர்களுடன் அபிப்ராயங்களைப் பகிர்ந்துக்கொள்ளும் நடவடிக்கையை, ரணில் விக்கிரமசிங்க கடந்த வாரம் முன்னெடுத்திருந்தார்.

பாராளுமன்ற கட்டட வளாகத்திலேயே இவர் இந்த நடவடிக்கையை முன்னெடுத்திருந்தார் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த செவ்வாய்க்கிழமை முதலாவதாக ஆரம்பிக்கப்பட்ட பாராளுமன்ற அமர்வுகள்

தொடர்ச்சி P2

## 672 கிலோ கிராம் உலர்ந்த மஞ்சள் மீட்பு

■ எஸ்.றொசேரியன் லெம்பேட்



மன்னார் - பெரியகடை கடற்கரை கலப்புப் பகுதியில் வைத்து, நேற்று (08) அதிகாலை 2.30 மணியளவில், ஒருதொகுதி உலர்ந்த மஞ்சள் மூடைகளை, இராணுவத்தினர் மீட்டுள்ளனர்.

மன்னார் இராணுவ புலனாய்வு பிரிவுக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் விரைந்து செயற்பட்ட இராணுவத்தினர், மன்னார் - பெரியகடை கடற்கரை கலப்புப் பகுதியில் வைத்து,

தொடர்ச்சி P2

அதிக நன்மைகளை கொண்ட

Dialog Fun BLASTER




டேட்டா கட்டணங்கள் இன்றி

Instagram Facebook WhatsApp

ரூ. 98/-* மட்டுமே. *மேலதிக வரிகள் இல்லை

14 நாட்களுக்கு 5GB டேட்டா (SD தரத்தில்)

செயற்படுத்தல் ரீலோட், MyDialog App அல்லது #678# மூலம்

Dialog எதிர்காலம் இன்றே.

TRC/D/PRO/21/01

நிபந்தனைகளுக்கு உட்பட்டது

Dialog 4G SIM அட்டை மற்றும் 4G தொலைபேசியினை கொண்ட முற்கொடுப்பனவு வாடிக்கையாளர்களுக்கு பொருந்தும்.

# அமைச்சர்கள்; 29ஆக அதிகரிப்பு

அமைச்சரவை மாற்றமொன்று ஏற்படுமென ஊகங்கள் தெரிவிக்கப்பட்ட போதிலும், ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று (08) இடம்பெற்ற பதவிப்பிரமாணத்தில், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ வசமிருந்த நிதியமைச்சு, பெசில் ராஜபக்ஷவுக்கு கைமாற்றப்பட்டுள்ளது.

அமைச்சரவைப் பொறுப்புகளில் மேற்கொள்ளப்பட்ட மறுசீரமைப்புக்கு ஏற்ப, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, பொருளாதாரக் கொள்கைகள், திட்ட அமுலாக்கல் அமைச்சராகப் பதவிப்பிரமாணம் செய்துகொண்டார்.

ஸ்ரீ லங்கா பொதுஜன முன்னணியின் தேசியப்பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் ஜயந்த கெட்டகொட இராஜினாமா செய்ததைத் தொடர்ந்து வெற்றிடமான பாராளுமன்ற உறுப்பினர் பதவிக்கு, பெசில் ராஜபக்ஷ நியமிக்கப்பட்டார்.

பெசில் ராஜபக்ஷ, எம்.பியாக சத்தியப்பிரமாணம் செய்து கொள்வதற்கு முன்னமே, அமைச்சராக பதவிப்பிரமாணம் செய்துகொண்டார். அவருக்கு, பாராளுமன்றத்தில் முன்வரிசை ஆசனத்தை ஒதுக்கிக்கொடுக்கவேண்டும் என்பதற்காகவே, சத்தியப்பிரமாணத்துக்கு முன்னர் பதவிப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆக, பாராளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்வதற்காக ஒருவரின் பெயர் பிரேரிக்கப்பட்டு, அந்த பெயர் வர்த்தமானியில் வெளியாகுமாயின், அவர் எந்நேரத்திலும் எம்.பியாக சத்தியப்பிரமாணம் செய்துகொள்ளலாம். அதற்கு முன்னர், அவருக்கு எந்தவொரு பதவியையும் ஏற்று பதவிப்பிரமாணம் செய்துகொள்ளலாம் என்பதும் குறிப்பிடத்தக்கது

பெசில் ராஜபக்ஷ, நிதியமைச்சராக பதவிப்பிரமாணம் செய்துகொண்டதன் பின்னர், நிதியமைச்சுக்குச் சென்று, தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக்கொண்டார். நிதியமைச்சின் கீழ் 52 நிறுவனங்கள் கொண்டுவரப்பட்டுள்ளன.

எம்.பியாக சத்தியப்பிரமாணம் செய்துக்கொள்வதற்காக, சபைக்குள் பிரவேசித்த பெசில் ராஜபக்ஷ, இருவகையான வணக்கம் செலுத்தியதை அவதானிக்க முடிந்தது. சகோதரர் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, மற்றுமொரு சகோதரரான சமல் ராஜபக்ஷ ஆகியோரின் முன்னிலையில் சென்று, குணிந்து வணக்கம் செலுத்தினர்.

அரசாங்கத் தரப்பைச் சேர்ந்த ஏனைய உறுப்பினர்களுக்கு சாதாரணமாக கைக்கூப்பி வணக்கம் செலுத்தினர். எம்.பியாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டதன் எதிரணியினரைப் பார்த்து கைக்கூப்பி வணக்கம் செலுத்தினார்.

நேற்றைய அமைச்சரவை மாற்றத்துக்குப் பின்னர், அமைச்சரவைக்குள் ராஜபக்ஷர்களின் எண்ணிக்கை ஐந்தாக அதிகரித்துள்ளது. ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, தலைமையிலான அரசாங்கத்தில், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, அமைச்சர்களான சமல் ராஜபக்ஷ, நாமல் ராஜபக்ஷ ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர். ஐந்தாவதாக பெசில் ராஜபக்ஷவும் இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளார்.

இதேவேளை, நேற்றைய அமைச்சரவை மாற்றத்தின் போது, இன்னும் சிலர் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்களாக பதவியேற்க உள்ளனர் என்றும், இன்னும் சில அமைச்சர்கள், அமைச்சரவையிலிருந்து விலக்கப்படுவார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது. ஆனால், இவையிரண்டுமே இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## கைதுக்கு எதிராக ஐ.தே.க வழக்கு

எதிர்ப்பு நடவடிக்கைகள், போராட்டங்களில் ஈடுபடும் மக்கள் விடுதலை முன்னணி மற்றும் முன்னணி சோசலிச கட்சியின் தலைவர்கள் கைதுசெய்யப்பட்டதை அடுத்து. இது குறித்து சட்டநடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு, தமது நீதிப்பிரிவுக்கு ரணில் விக்கிரமசிங்க ஆலோசனை வழங்கியுள்ளார்.

எனவே, ரணில் விக்கிரமசிங்கவின் ஆலோசனைக்கமைய, ஐக்கிய தேசியக் கட்சியின் நீதிப்பிரிவானது அடுத்த வாரம் உயர்நீதிமன்றில் அடிப்படை உரிமை மனுக்களைத் தாக்கல் செய்யவுள்ளது.

## 'ஜூலை மூன்றாவது வாரம் 'அஸ்ட்ரா செனகா' கிடைக்கும்'

"நாட்டுக்குத் தேவையான அஸ்ட்ரா செனெகா தடுப்பூசிகள் ஜூலை மூன்றாம் வாரம் இலங்கை வரவுள்ளனவென எங்களுக்குத் தகவல் கிடைத்துள்ளது.

"இதன் காரணமாக பைசர் தடுப்பூசியை இரண்டாவது டோஸாக வழங்குவதை உடனடியாக நிறுத்துமாறும அஸ்ட்ரா செனெகா இரண்டாவது டோஸுக்காக மூன்றாவது வாரம் வரை காத்திருக்குமாறும் எங்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

"இதன் காரணமாக பைசர் தடுப்பூசி வழங்குவதற்கான முற்பதிவுகள் அனைத்தும் இரத்துச்செய்யப்படுகின்றன" என அவர் தெரிவித்துள்ளார்.

## கம்பியால் கட்டிவைத்து மகனை அடித்த தந்தை கைது

கணவரிடம் ஒப்படைத்து விட்டு, மூன்று வருடங்களுக்கு முன்னர், வெளிநாட்டுக்கு பணிப்பெண்ணாகச் சென்றுள்ளார்.

பிள்ளைகளை தனியாக வீட்டில் விட்டுவிட்டு தந்தை வேலைக்குச் சென்றுவிடும் நிலையில், குறித்த பிள்ளைகளே வீட்டு வேலைகளையும் செய்து வந்துள்ளனர்.

இந்நிலையில், வேலைக்கு சென்று இரவு வேலைகளில் வீடு திரும்பும் தந்தை மது போதையிலேயே வீட்டுக்கு வருவதுடன், பிள்ளைகள் செய்த சிறு சிறு தவறுகளுக்கும் பாரிய அளவில் தண்டனை கொடுப்பதாகவும் அக்கம் பக்கத்தினர் தெரிவித்துள்ளார்.

**இதேவேளை, எட்டு வயது மகன் செய்த சிறு தவறொன்றுக்காக, கம்பி ஒன்றில் சிறுவனைக் கட்டிப்போட்டு தந்தை நேற்று முன்தினமும் அடித்துள்ளார். அடி வலி தாங்கமுடியாது சிறுவன் கதறியுள்ளார். அச்சத்ததை கேட்ட பக்கத்து வீட்டிலுள்ளவர்கள், கதவை உடைத்து குறித்த சிறுவனைக் காப்பாற்றியுள்ளனர்**

இதேவேளை, எட்டு வயது மகன் செய்த சிறு தவறொன்றுக்காக, கம்பி ஒன்றில் சிறுவனைக் கட்டிப்போட்டு தந்தை நேற்று முன்தினமும் அடித்துள்ளார். அடி வலி தாங்கமுடியாது சிறுவன் கதறியுள்ளார். அச்சத்ததை கேட்ட பக்கத்து வீட்டிலுள்ளவர்கள், கதவை உடைத்து குறித்த சிறுவனைக் காப்பாற்றியுள்ளனர்.

பின்னர் , இப்பிரதேச மக்கள் இது குறித்து பின்னவல பொலிஸ் நிலையத்துக்கு வழங்கிய தகவலுக்கமைய, அவரை கைதுசெய்த பொலிஸார், சிறுவர்கள் இருவரையும் பலாங்கொட வைத்தியசாலையில் அனுமதித்தனர்.

அத்துடன், சந்தேகநபர், பலாங்கொடை நீதவான் நீதிமன்றில் இன்று (9) ஆஜர் படுத்தவுள்ளதாக பின்னவல பொலிஸார் தெரிவித்தனர்.

## சகலரின் ஒத்துழைப்பையும் கேட்டார் நிதியமைச்சர் பெசில்

நிதியமைச்சில், நேற்று (08) தனது கடமைகளைப் பொறுப்பேற்றதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

"உங்களில் ஒருவர் நிதியமைச்சராக பதவியேற்றுள்ளார் என்பதை கருத்திற் கொள்ளுங்கள். நாட்டு மக்களின் எண்ணப்பாடுகளுக்கு முன்னுரிமை வழங்கி அரசாங்கம் செயற்படும். அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கு நாட்டு மக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்" என்றார்.

பாராளுமன்ற உறுப்பினராகவும்., அ மைச்சராகவும் மீண்டும் செயற்படுவதற்கு வாய்ப்பு வழங்கிய ஜனாதிபதி, பிரதமர் மற்றும் ஸ்ரீ- லங்கா பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்கள் அனைவருக்கும் நன்றியை தெரிவிப்பதாகக் கூறிய அவர், மீனவர்கள், விவசாயிகள், தொழிலாளர்கள், துறைசார் நிபுணர்கள் என அனைத்து தரப்பினர்களுக்கு எதிர்பார்ப்புக்களுக்கு முன்னுரிமை வழங்கி அரசாங்கம் செயற்படும் என்றார்.

கடந்த காலங்களில் மக்களுடன் மக்களாக இணைந்து செயற்பட்டுள்ளேன். தற்போதும் அவ்வாறே மக்கள் மத்தியில் இருந்து செயற்படுவேன். நிதியமைச்சர் பதவி கிடைத்து விட்டது என்பதற்காக கொள்கைக்கு முரணாக ஒருபோதும் செயற்பட மாட்டேன் என்றார்.

## 15 வயதான சிறுமி விவகாரம்: விளம்பரம் செய்தவர் கைது

**சிறுமி தொடர்பிலான விசாரணைகளின் போதே, அந்த இணையத்தளத்தின் உரிமையாளர் தொடர்பிலும் தகவல்கள்**

15 வயதான சிறுமி விற்பனைக்கு உள்ளது" என்ற விளம்பரத்தை இணையத்தளத்தில் பதிவேற்றிய இணையத்தளமொன்றின் உரிமையாளரே, இவ்வாறு நேற்று (08) கைது செய்யப்பட்டுள்ளார்.

சிறுமி தொடர்பிலான விசாரணைகளின் போதே, அந்த இணையத்தளத்தின் உரிமையாளர் தொடர்பிலும் தகவல்கள் கிடைத்துள்ளன என குற்றப்புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்தார். சந்தேகநபர், கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றத்தில் இன்று (09) ஆஜர்படுத்தப்படவுள்ளார்.

## தேர்தல் முறைமைக்கு 115 முன்மொழிவுகள்

கிடைக்கப்பெற்றுள்ளன என அக்குழுவின் தலைவர் சபை முதல்வரும் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சருமான தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

"ஏற்றுக்கொள்ளப்பட்ட 07 அரசியல் கட்சிகளின் மூலம் யோசனைகள் முவைக்கப்பட்டுள்ளன, எதிர்வரும் 15ஆம் திகதி வரை அந்தக் கட்சிகளுக்கு யோசனைகளை சமர்ப்பிக்க முடியும்" என்றார்.

மேற்படி குழுவின் கூட்டம், பாராளுமன்றக் கட்டடத்தொகுதியில் நேற்று (08) நடைபெற்றது. இதன்போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அந்த யோசனைகளை sec. pscelectionreforms2021@parliament.lk எனும் மின்னஞ்சல் முகவரிக்கோ அல்லது செயலாளர், பாராளுமன்ற விசேட குழு, இலங்கை பாராளுமன்றம், ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே எனும் முகவரிக்கோ அனுப்பிவைக்க முடியுமென அறிவிக்கப்பட்டுள்ளது,

தேர்தல் சட்டங்கள் மற்றும் தேர்தல் முறைமையில் மறுசீரமைப்புகளை மேகொள்வது தொடர்பில் 2021 ஜூன் 30ஆம் திகதி வரை கிடைக்கப்பெற்ற பொதுமக்களின் யோசனைகளை சபைக்கு சமர்ப்பித்தல் மற்றும் அந்த யோசனைகள் பற்றிய சாராம்சம் தொடர்பில் நேற்றைய கூட்டத்தில் அவதானம் செலுத்தப்பட்டது.

உத்தேச மறுசீரமைப்புகள் தொடர்பில் நிபுணர்கள் குழுவொன்றை நியமிப்பது தொடர்பிலும் இதன்போது அவதானம் செலுத்தப்பட்டது.

## ரணில் எம்.பி தனது பயணத்தை ஆரம்பித்தார்

தொடக்கம் பல தடவைகள் எதிர்க்கட்சி உறுப்பினர்களுடன் ரணில் விக்கிரமசிங்க தமது அரசியல் பயணம் குறித்து பகிர்ந்துக்கொண்டார்.

தற்போதைய பாராளுமன்றத்தின் எதிர்க்கட்சி மற்றும் ஆளும் கட்சியின் பல உறுப்பினர்களுக்கு அடுத்த பொதுத் தேர்தலில் வெற்றிப்பெற முடியாததை அடிப்படையாக வைத்து, புதிய முகங்களை பொதுத் தேர்தலில் போட்டியிடச் செய்வதை எதிர்பார்ப்பது குறித்தும் ரணில் விக்கிரமசிங்க தனது கருத்துகளை பரிமாறிக்கொண்டதாக பாராளுமன்ற தகவல்கள் தெரிவித்துள்ளன.

## இரண்டு இராஜாங்க அமைச்சுகள் மறுசீரமைப்பு

வகைகள், சேதன உணவுகள், மரக்கறிகள், பழ வகைகள், மிளகாய், வெங்காயம் மற்றும் உருளைக்கிழங்கு செய்கை மேம்பாடு, விதைகள் உற்பத்தி, உயர் தொழிநுட்ப விவசாய இராஜாங்க அமைச்சராக, சஷீந்திர ராஜபக்ஷ பதவிப்பிரமாணம் செய்துகொண்டார்.

அத்துடன், கரையோரப் பாதுகாப்பு மற்றும் தாழ் நிலங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சராக, மொஹான் டி சில்வா பதவிப்பிரமாணம் செய்துகொண்டார்.

## ஆர்ப்பாட்டத்தில்...

அவர்கள் அனைவரும் தலா 25 ஆயிரம் ரூபாய் ரொக்கப்பிணையில் விடுதலைச் செய்யப்பட்டுள்ளனர்.

பாராளுமன்றத்துக்கு செல்லும் வழியில், பொல்துவ சுற்றுவட்டத்திலேயே இந்த ஆர்ப்பாட்டம் நேற்று (08) முன்னெடுக்கப்பட்டது.

அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த ஆர்ப்பாட்டத்தில், பிக்குகள் பெண்கள் உள்ளிட்டோர் பங்கேற்றிருந்தனர். எனினும், தனிமைப்படுத்தல் சட்டங்களை மீறினர் என்றக் குற்றச்சாட்டுகளின் கீழ், அவர்களை பொலிஸார் அதிரடியாக கைது செய்து பஸ்களில் ஏற்றினர். இவர்களில், இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலினும் அடங்குகின்றார்.

பொலிஸாரில் கைது செய்யப்பட்ட ஆர்ப்பாட்டக்காரர்கள் அனைவரும் தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, பாராளுமன்றத்தில் நேற்று (08) குற்றஞ்சாட்டியிருந்தார்.

" எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள், பொலிஸாரின் கைது செய்யப்பட்டு, பஸ்களில் ஏற்றி, தூர பிரதேசங்களிலுள்ள தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு எவ்விதமான பி.சி.ஆர் பரிசோதனைகளும் முன்னெடுக்கப்படாமலே அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்" என்றார்.

இந்நிலையில், நேற்றுமாலை 6 மணியளவில் அவர்கள் அனைவரும் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். அவர்களில் சிலரை அழைத்துச் செல்ல முயன்றதால், கொழும்பு கோட்டை நீதவான் வளாகத்தில் பதற்றம் ஏற்பட்டது.

## 672 கிலோ கிராம் உலர்ந்த மஞ்சள் மீட்பு

சட்ட விரோதமாக நாட்டக்குள் கொண்டு வரப்பட்ட 18 மூடைகளில் பொதி செய்யப்பட்ட 672 கிலோ கிராம் உலர்ந்த மஞ்சள் மூடைகளையும் மீட்டனர்.

அத்துடன், வள்ளங்கள் - 3 மற்றும் பட்டா ரக வாகனம் - 1 என்பனவும் மீட்கப்பட்டுள்ளன.

இதையடுத்து, சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் தப்பிச் சென்றுள்ளனர்.

மீட்கப்பட்ட மஞ்சள் மூடைகள் உள்ளிட்ட பொருள்கள், மன்னார் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

## சஹ்ரானின் வகுப்பில் பங்கேற்றவர் கைது

பயங்கரவாத விசாரணைப் பிரிவினரால், சந்தேகத்தின் பேரில் அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

2018 மற்றும் 2019ஆம் ஆண்டுகளில் நடத்தப்பட்ட அடிப்படைவாத வகுப்புகளில் சந்தேகநபர் கலந்துகொண்டுள்ளமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது

நாரம்மல பகுதியை சேர்ந்த 24 வயதான இளைஞனே கைது செய்யப்பட்டுள்ளார் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

சந்தேகநபர், கொச்சிக்கடை -தலுகொட்டுவ பகுதியை வசிப்பிடமாக கொண்டுள்ளார்.

அடிப்படைவாத வகுப்புகளில் கலந்துகொண்ட 14 பேர் இதுவரையிலும் செய்யப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## 'காணிகளை விடுவிப்பதன் மூலம் சுபீட்சத்தின் நோக்கு விரைவுபடுத்தப்படும்'



வனஜீவராசிகள் மற்றும் வனப் பாதுகாப்புத் திணைக்களங்களினால் கட்டுப்படுத்தப்பட்டுள்ள விவசாய நிலங்கள் விடுவிக்கப்பட வேண்டும் என்று கோரிக்கை முன்வைத்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடக்கு, கிழக்கு பிரதேசத்தில் நீர்வேளாண்மை பண்ணைகளை அமைப்பற்கு தேவையான காணிகள் தொடர்பாகவும் பிரஸ்தாபித்துள்ளார்.

வனஜீவராசிகள் மற்றும் வனப் பாதுகாப்பு அமைச்சர் சி.பி. இரத்நாயக்காவுடனான சந்திப்பின் போதே கடற்றொழில் அமைச்சரினால் குறித்த விடயங்கள் பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளன.

வனஜீவராசிகள் அமைச்சில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சந்திப்பின்போது, வடக்கு மாகாணத்தில் தற்போது வனத்துறையினரினால் கட்டுப்படுத்தப்பட்டுள்ள ஆயிரக்கணக்கான ஏக்கர் காணிகளில், யுத்தத்திற்கு முற்பட்ட காலப் பகுதியில் விவசாய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டமையினை அமைச்சர் டக்ளஸ் டக்ளஸ் தேவானந்தா துறைசார் அமைச்சர் சி.பி. இரத்நாயக்கவிற்கு தெளிவுபடுத்தினார்.

அத்துடன், குறித்த காணிகளில் விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு வடக்கு விவசாயிகள் ஆர்வமாக இருப்பதனையும் சுட்டிக்காட்டிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, சம்மந்தப்பட்ட நிலங்கள் விடுவிக்கப்பட்டு விவசாய நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும் பட்சத்தில், அரசாங்கத்தின் சுபீட்சத்தின் நோக்கு வேலைத் திட்டத்தினை விரைவுபடத்த முடியும் எனவும் தெரிவித்தார்.

அதேபோன்று, வடக்கு கிழக்கு பிரதேசத்தில் ஏற்றுமதித் தரத்திலான நண்டு, இறால், மீன் வளர்ப்பு பண்ணைகளை உருவாக்கி நீர்வேளாண்மையை விருத்தி செய்வதன் மூலம் மேலதிக வருமானத்தை மக்களுக்கு பெற்றுக் கொடுப்பதுடன் அந்நியச் செலாவணியைப் பெற்றுக் கொள்வதற்கும் தீவிர கவனம் செலுத்தப்பட்டு வருகின்ற நிலையில், வனப் பாதுகாப்பு மற்றும் வனஜீவராசிகள் திணைக்களத்தினால் கட்டுப்படுத்தப்பட்டுள்ள காணிகளில் நீர்வேளாண்மை பண்ணைகளை அமைப்பதற்கு பொருத்தமான இடங்களை விடுவித்து பயன்படுத்திக் கொள்வது தொடர்பாக குறித்த சந்திப்பின் போது கடற்றொழில் அமைச்சரினால் பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

சக்தி, சிரச

# ஊடக சுதந்திரத்தை ஆதரித்து ஆர்ப்பாட்டம்

சக்தி, சிரச ஊடக சுதந்திரத்தை ஆதரித்து, ஐக்கிய மக்கள் சக்தியின் எம்.பிக்கள், ஆர்ப்பாட்டமொன்றை, பாராளுமன்றத்துக்கு செல்லும் வீதியின் ஓரத்தில் நேற்று (08) நடத்தினர்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாஸ தலைமையில் இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இதில், தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் எம்.பியுமான மனோ கணேசன் மற்றும் கொழும்பு மாவட்ட எம்.பியான முஜிபுர் ரஹ்மான் ஆகியோரும் பங்கேற்றிருந்தனர்.

சிரச, சக்தி, சியத நிறுவனங்களை தாக்கியழித்த கறுப்பு வரலாறும், ஊடக நிறுவன உரிமங்களை அரசியல் நோக்கில் வழங்கிய, ரத்து செய்த வரலாறும் இந்த ஆட்சியாளருக்கு இருக்கிறது எனக் குறிப்பிட்டுள்ள மனோ கணேசன், ஆனால், மீண்டும் இந்த வரலாறு திரும்ப முடியாது. நாம் உறுதியாக சிரச மற்றும் சக்தி ஊடக சுதந்திரத்தை ஆதரித்து நிற்கிறோம் எனக் குறிப்பிட்டுள்ளார்.

சக்தி மற்றும் சிரச ஊடக வலையமைப்பின் ஒளிப்பரப்பு அனுமதிப்பத்திரத்தை சட்ட நடவடிக்கையின் ஊடாக பறிப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாக ஐக்கிய மக்கள் சக்தியினர், பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் (07) கடும் எதிர்ப்பைத் தெரிவித்திருந்தனர். இதனால், சபைக்குள் அமளி துமளி ஏற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



# கொழும்பில் நீர்வெட்டு

கொழும்பின் பல பகுதிகளில் நாளை சனிக்கிழமை (10) காலை 9 மணி முதல் 21 மணித்தியால நீர்வெட்டு அமுல்படுத்தப்படுமென, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை அறிவித்துள்ளது.

இதனடிப்படையில், கொழும்பு 1, 2, 3, 7, 8,



9, 10 மற்றும் 11 ஆகிய பகுதிகளிலேயே நீர்வெட்டு அமுல்படுத்தப்படவுள்ளதாக அறிவித்துள்ளது

அதேவேளை, இந்த நீர்வெட்டு கொழும்பு 4, 5, 6 ஆகிய பகுதிகளில் அமுல்படுத்தப்படாது அத்தியாவசியத் திருத்தப் பணிகள் காரணமாகவே நீர்வெட்டு அமுல்படுத்தப்படவுள்ளது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# உரத்துக்காக கூடியவர்களுக்கு பி.சி.ஆர்

■ செ.கீதாஞ்சன், சண்முகம் தவசீலன்

முல்லைத்தீவு - ஒட்டுசுட்டான் கமநல சேவை நிலையத்தில், நேற்று முன்தினம் (07) உரத்தைப் பெற்றுக்கொள்வதற்காக ஒன்றுகூடியவர்களுக்கு, பி.சி.ஆர் பரிசோதனை முன்னெடுக்கப்பட்டது.

மக்கள் கூட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள என்பன தடை விதிக்கப்பட்டுள்ள நிலையில், கமநல சேவை நிலையத்தில், நேற்று முன்தினம் (07) நூற்றுக்கணக்கான விவசாயிகள் ஒன்றுகூடினர்

இதன்போது, அப்பகுதிக்கு விரைந்த



பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், கமநல சேவை நிலையத்துக்குள் இருந்தவர்களை வைத்து மூடியுள்ளனர். இந்நிலையிலும் அதில் இருந்து ஒரு சிலர் தப்பி வெளியில் சென்றுள்ளனர்.

இதையடுத்து, அங்கு இருந்த 75 பேரிடம் பி.சி.ஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டதுடன், பி.சி.ஆர் முடிவு வரும் வரை வீட்டை விட்டு வெளியேறாதவாறு, அவர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

# பாகிஸ்தான் உயர்ஸ்தானிகரை ரவூப் ஹக்கீம் சந்தித்துப் பேச்சு



பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் ஸாத் கட்டாக்கை ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், பாகிஸ்தான் உயர்ஸ்தானிகராலயத்தில் வைத்து அண்மையில் சந்தித்துக்கொண்டார்.

அமைச்சர் பெசில் ராஜபக்ஷவின் பதவியேற்பு

# ‘அரசாங்கத்தை வலுப்படுத்தியுள்ளது’

நிதி அமைச்சராக பெசில் ராஜபக்ஷ பதவியேற்றுக் கொண்டமை, அரசாங்கத்தை மேலும் வலுப்படுத்தியிருப்பதாக தெரிவித்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி சார்பில் தன்னுடைய வாழ்த்துகளையும் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக கடற்றொழில் அமைச்சர் வெளியிட்டுள்ள அறிக்கையிலே தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

“நிதி அமைச்சராகப் பதவியேற்றுள்ள பெசில் ராஜபக்ஷவின் ஆளுமை எமது மக்களால் நன்கு அறியப்பட்ட ஒன்றாகும்.

“அவ்வாறான ஒருவர், பாராளுமன்ற உறுப்பினராகவும் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சராகவும் பதவியேற்றுள்ளமை, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் தலைமையிலும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் வழிநடத்தலிலும் பயணித்துக் கொண்டிருக்கும் எமது அரசாங்கத்தை மேலும் வலுப்படுத்தி இருக்கின்றது.

“அதேபோன்று,



நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார சவால்கள் தொடர்பான நம்பிக்கையையும் மக்களுக்கு ஏற்படுத்தியிருக்கின்றமையை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது.

“மேலும், கடந்த காலங்களில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சராக இருந்து, அமைச்சர் பெசில் ராஜபக்ஷ மேற்கொண்ட வேலைத் திட்டங்களும், எம்மால் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களுக்கு அவர் வழங்கிய ஒத்துழைப்புக்களும் வடக்கு மற்றும் கிழக்கு மக்கள் மத்தியில் நிலையான இடத்தைப் பிடித்திருக்கின்றது.

எனவே, அவரின் தற்போதைய பதவியேற்பு புதிய நம்பிக்கையை ஏற்படுத்தியிருக்கின்றது” என்று தெரிவித்துள்ளார்.

கட்சி பேதங்களுக்கு அப்பால்

# ‘இளைஞர்களுக்கு வாய்ப்பளியுங்கள்’

இளைஞர், யுவதிகளுக்கு அதிக சந்தர்ப்பங்களைப் பெற்றுக்கொடுக்க வேண்டுமென வலியுறுத்திய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன், இலங்கையில் இன்று பென்சன் வாங்கிய பின்னர் நாட்டுக்குச் சேவையாற்றும் முறையொன்று உருவாகியுள்ளதாக சாடினார்.

அரசாங்கத்தில் உள்ள இளம் தலைவர்களுக்கு அதிகாரத்தை வழங்க வேண்டும் என்று தாம் எதிர்பார்ப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் உரையாற்றிய போதே, அவர்



இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்தும் கருத்துரைத்த அவர், “கட்சி பேதங்களுக்கு அப்பால் இளைஞர்களுக்கு அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும்.

“பின்லாந்தில் இளம் வயதுடைய பெண் பிரதமர் உள்ளார். இத்தாலி போன்ற நாடுகளில் 33 வயதில் நிதியமைச்சர் உள்ளார். இலங்கையில் அவ்வாறான இளம் பிரதமர் ஒருவர் வர வேண்டும் என்று நான் நம்பிக்கை கொண்டுளேன்.

“நாமல் ராஜபக்ஷவை பிரதமராக்க போவதால் சமூக ஊடகங்களில் செய்திகள் வெளியாகின. இவ்வாறு இளைஞர் ஒருவர் பிரதமரானால் எங்களுக்கும் விருப்பம்தான். நியூஸிலாந்தில் பெண் பிரதமர் இரண்டு வருடங்களில் செய்த சேவையை இரண்டு நிமிடங்களில் கூறினார்.

“எமது நாட்டில் ஒரு வருடத்தில் செய்த சேவைகளைக் கூற 69 நிமிடங்கள் எடுத்தன. எனவே, இளைஞர், யுவதிகளுக்கு இடமளிக்க வேண்டும்” என்றார்.

# ஆதரவாளர்கள் ஆரவாரம்...



பெசில் ராஜபக்ஷ நிதி அமைச்சராக பதவிப் பிரமாணம் செய்து கொண்டமைக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில், வடக்கின் பல பாகங்களிலும் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் ஆதரவாளர்கள், நேற்று (08) வெடிகொழுத்தி இனிப்புப் பண்டங்கள் பரிமாறி, மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.

உழ்ஹிய்யாவின்போது

# ‘ஜம்இய்யத்துல் உலமாவின் சொல்லைத் தட்டிக்கழிக்காதீர்’

■ றம்ஸி குத்தூஸ்

உழ்ஹிய்யாவை நிறைவேற்றும் முஸ்லிம்கள், சுகாதார அமைச்சினால் வழங்கப்பட்டுள்ள வழிகாட்டல்களுக்கமைய நடந்துகொள்ளுமாறு கேட்டுக்கொண்ட அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா, சமூக வலைத்தளங்களில் உழ்ஹிய்யா தொடர்பானவற்றை பகிர்ந்து கொள்வதை கண்டிப்பாக தவிர்த்துக்கொள்ள வேண்டுமெனவும் கேட்டுள்ளது.

இது தொடர்பாக அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமாவின் பொதுச் செயலாளர், எம்.அர்கம் நூராமித் தெரிவித்ததாவது;

“கொரோனா காரணமாக நாட்டில் அசாதாரண சூழ்நிலை காணப்படுகிறது. இதனால், இவ்வருடம் உழ்ஹிய்யாவின் அமலை நிறைவேற்றுவதற்கு சந்தர்ப்பம் பொருத்தமாக அமைந்தால், அதனை நிறைவேற்றும் போது


**“ கொரோனா காரணமாக நாட்டில் அசாதாரண சூழ்நிலை காணப்படுகிறது. இதனால், இவ்வருடம் உழ்ஹிய்யாவின் அமலை நிறைவேற்றுவதற்கு சந்தர்ப்பம் பொருத்தமாக அமைந்தால்**

சுகாதார அமைச்சினால் வழங்கப்பட்டுள்ள அனைத்து வழிகாட்டல்களையும் கட்டாயம் கடைப்பிடிக்கவும்.

“நாட்டில் நடைமுறையிலுள்ள விலங்குச் சட்டம் கூறும் விடயங்களையும் கட்டாயம் கவனத்திற் கொள்ளுமாறும்; பிரதேசத்துக்குப் பிரதேசம் நிலைமைகள் வித்தியாசப்படுவதனால், உழ்ஹிய்யாவை நிறைவேற்ற முடியுமா என்பதை, குறித்த பிரதேச ஜம்இய்யத்துல் உலமா, மஸ்ஜித் நிர்வாகம், ஏனைய முக்கியஸ்தர்களுடன் ஆலோசனை செய்து, பொருத்தமான முடிவொன்றை எடுத்துக் கொள்ளுமாறும் கேட்டுக் கொள்கின்றோம்” என்றார்.

பிக்குவை படுகொலை செய்ய சதி;

# விகாராதிபதி கைது



இங்கிரிய பகுதியில் உள்ள விகாரையொன்றின் விகாராதிபதி கைதுசெய்யப்பட்டுள்ளார் என பொலிஸ் பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப்பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

மற்றொரு பிக்குவை கொலை செய்ய சதித்திட்டம் தீட்டிய குற்றச்சாட்டில் பாணந்துறை குற்றத்தடுப்பு பிரிவினரால், அவர், நேற்று முன்தினம் (07) கைதுசெய்யப்பட்டுள்ளார் என பொலிஸ் பேச்சாளர் கூறினார்.

49 வயதுடைய குறித்த விகாராதிபதி, அதே விகாரையில் உள்ள மற்றுமொரு பிக்குவைக் கொலைசெய்வதற்கா கவிகாரையின் சாரதிக்கு 11 இலட்சம் ரூபாய் பணத்தை வழங்கியுள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

அத்துடன், சாரதியை கைதுசெய்ய நடவடிக்கை மேற்கொண்டுள்ளதுடன், அதற்கான விசேட பொலிஸ் குழுவொன்று ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.



நீதிமன்ற வழக்குகளில்

# பொதுமக்களை அனுமதித்தல்

## தற்போதைய நடைமுறை குறித்து விளக்கம்

■ க.விஜயரெத்தினம், எம்.எஸ்.எம் நூர்தீன்

நீதிமன்றங்களின் கட்டடத் தொகுதிகளுக்குள் தேவையின்றி அதிகளவிலான பொதுமக்கள் கூட்டமாக நிற்பதற்கோ அல்லது உள்நுழையவோ தற்போது அனுமதி இல்லை என, மட்டக்களப்பு மாவட்ட சட்டத்தரணிகள் சங்க சட்டத்தரணி பே.பிறேம்நாத் தெரிவித்தார்.

அத்துடன், கிழக்கு மாகாணத்தில் இருந்து கொண்டே வழக்குகளுக்கு சமூகமளிக்காதவர்களுக்கு எதிராக பிடிவிறாந்து பிறப்பிக்கப்படும் சந்தர்ப்பம் உள்ளதாகவும் அவர் எச்சரித்தார்.

மட்டக்களப்பில் உள்ள அவரது வீட்டில் நேற்று முன்தினம் (07) ஊடகவியலாளர் சந்திப்பொன்று நடைபெற்றது.

இதில் கலந்துகொண்டு, நீதிமன்ற வழக்குகள் தொடர்பில் பொதுமக்கள் அனுமதிக்கப்படும் முறை தொடர்பில் விளக்கமளிக்கும் போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

“கொரோனா தொற்று அச்சநிலை காரணமாக, கடந்த இரு மாதங்களாக நீதிமன்ற நடவடிக்கைகளில் பல கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டு, நீதிமன்ற நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

“அதன் அடிப்படையில், நீதிச்சேவை ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கையின் அடிப்படையில், நீதிமன்றங்களை நடத்துவதற்கு சில நிபர்ந்தனைகளினூடான அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

“இதன்படி, மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றம், மாவட்ட நீதிமன்றம், மேல் நீதிமன்றம், மேல்முறையீட்டு நீதிமன்றம், களுவாஞ்சிகுடி நீதவான் நீதிமன்றம், ஏறாவூர் நீதவான் நீதிமன்றம் ஆகியவற்றில் வழக்குகளுக்காக பொதுமக்கள் உள்ளெடுக்கப்படும் போது, எவ்வாறான நடைமுறைகள் பின்பெற்றப்பட வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

“இது தொடர்பான கடமை மட்டக்களப்பு சட்டத்தரணிகள் சங்கத்துக்கு உள்ளது. குறித்த நீதிமன்றங்களின் உள் வீதிகளிலோ அல்லது நீதிமன்றங்களின் கட்டடங்களினுள்ளோ எவரும் அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

“அவ்வாறு அனுமதிக்கப்பட வேண்டுமாயின், விளக்க வழக்குகளுக்கான எதிரிகள் அல்லது சந்தேகநபர்கள் அல்லது சாட்சிகள், தங்களுடைய சட்டத்தரணிகள் மூலமாக உறுதிப்படுத்திக்கொண்டு, உள்நுழைய அனுமதிக்கப்படுவார்கள்.

“அத்துடன், அழைக்கப்படும் வழக்குகளுக்கு உரியவர்கள், நிதிமன்றத்தினுள்



அனுமதிக்கப்படமாட்டார்கள். அவ்வாறு வருபவர்கள் அவர்களின் வழக்குகளுக்காக சட்டத்தரணியிடம் தொலைபேசி மூலம் அறியப்படுத்தி, சட்டத்தரணிகளால் வர சொல்லப்பட்டால் மாத்திரமே உள்ளே அனுமதிக்கப்படுவார்கள்.

“மேலும், தாவரிப்பு வழக்குகள், அவசரமாக கூட்டப்பட வேண்டிய வழக்குகள் பிணை வழக்குகள் மற்றும் குடும்ப வன்முறைகள் சம்பந்தமான வழக்குகள் ஆகியன வழமையான முறைகளில் நடைபெறும். எனினும், இந்த வழக்குகளுக்கு வருகின்றவர்களும் முழுமையாக சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றப்பட வேண்டும். “நீதவான் நீதிமன்றங்களில் விளக்க வழக்குகள் அழைக்கப்படும் போது, தற்போது நாட்டில் அமுலில் உள்ள மாகாணங்களுக்கு இடையிலான பயணத்தடை காரணமாக, வெளி மாகாணங்களில் இருந்து வர முடியாதவர்களுக்கு பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்ட மாட்டாது. ஆனால் கிழக்கு மாகாணத்தில் இருந்து கொண்டு வழக்குகளுக்கு வராதவர்களுக்கு பிடிவிறாந்து பிறப்பிக்க சந்தர்ப்பம் உள்ளது” என்றார்.

எல்லைக்கிராம மக்களுக்கும்

# ‘தடுப்பூசி வழங்க ஏற்பாடு’



■ சுப்பிரமணியம் பாஸ்கரன்

எல்லைக்கிராம மக்களுக்கும் தடுப்பூசி வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவித்த கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் சரவணபவன், படுக்கையில் உள்ள நோயாளர்களை அவர்கள் விரும்பினால் அம்பியூலன்ஸில் ஏற்றிச்சென்று, தடுப்பூசி வழங்க ஏற்பாடு செய்யப்படும் என்றும் கூறினார்.

கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில், நேற்று (08) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்துரைத்த அவர், முன்னிலை பணியாளர்கள், வர்த்தகர்கள் உள்ளிட்டோருக்கும் தடுப்பூசி வழங்க அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும், எதிர்வரும் 12ஆம் திகதிக்குப் பின்னர், அவர்களுக்கான தடுப்பூசி ஏற்றும் பணிகள் இடம்பெறவுள்ளதாகவும் கூறினார்.

மாவட்டத்தில் நோய்த்தாக்கம் இல்லாத நிலையில் அடுத்தகட்டம் நோய்த்தாக்கம் ஏற்படாது என்பதற்கான உத்தரவாதம் இல்லை எனத் தெரிவித்த அவர், அடுத்த தடவை இதைவிட மோசமானதாகக்கூட இருக்கலாம் என்றும் கூறினார்.

அடுத்தகட்ட தடுப்பூசி, எதிர்வரும் 12ஆம் திகதியளவில் கிடைக்குமென்றும், கிடைத்தவுடன் பிரதேச வைத்தியசாலை, தள வைத்தியசாலை, பொது வைத்தியசாலை மற்றும் தூர இடங்களில் உள்ளவர்களிற்கு பொது இடங்களிலே தடுப்பூசியை ஏற்றுவதற்கு ஏற்பாடு செய்துள்ளதாகவும், அவர் கூறினார்.

‘இங்கு தடுப்பூசியை பெற்றுக்கொள்ளாதவர்கள் அருகில் உள்ள நிலையங்களில் வந்து தடுப்பூசியை பெற்றுக்கொள்ள முடியும். குறித்த பகுதிகளில் தடுப்பூசி ஏற்றப்படும்போது அறிவிக்கப்படும். இதேவேளை, இந்த மாவட்டத்தில் நீண்ட காலமாக தற்காலிகமாக வந்து தங்கியுள்ளவர்களும் தடுப்பூசியை இங்கு பெற்றுக்கொள்ளலாம். அதன்போது, பிரதேசத்துக்குக் பொறுப்பாக உள்ள கிராம சேவையாளரைத் தொடர்புகொண்டு உறுதிப்படுத்தி அதனை பெற்றுக்கொள்ளலாம்.

‘அத்துடன், முல்லைத்தீவு, மன்னார் மாவட்டத்தின் எல்லைக் கிராம மக்கள் தூர வசதியை கருத்தில்கொண்டு, எமது மாவட்ட வைத்தியசாலைகளில் சேவைகளை பெற்றக்கொள்வது வழமை. இதற்கமைய, அவர்களுக்கும் தடுப்பூசியை வழங்குவதற்கான ஏற்பாடுகளை செய்யலாம் என்று நாங்கள் யோசித்துள்ளோம்” என்றும், அவர் தெரிவித்தார்.

## ஆசிவேண்டி…



பாராளுமன்ற உறுப்பினராகவும் நிதிஅமைச்சராகவும் பதவிப்பிரமாணம் செய்துகொண்டுள்ள பெசில் ராஜபக்ஷவுக்கு ஆசி வேண்டி, கலாநிதி யோகராஜன் அறக்கட்ட அமைப்பின் யாழ். மாவட்ட இணைப்பாளர் ந.யோகராஜனின் ஏற்பாட்டில், யாழ்ப்பாணம் தனியார் விடுதியில், நேற்று (08) காலை, விசேட பூஜை வழிபாடு நடைபெற்றது.

இந்து, பௌத்தம், கிறிஸ்தவ மதகுருக்களின் பங்குபற்றுதலுடன், இந்த விசேட பூஜை வழிபாடு நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

(படங்கள் - என்.ராஜ்)

## ‘இதுவரை 5,842 பேருக்கு தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளது’

■ மு.தமிழ்ச்செல்வன்



கிளிநொச்சி மாவட்டத்தில், நேற்று (08) வரை, 5,842 பேருக்கு, கொரோனா தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளதாக, பிராந்திய தொற்று நோயியல் வைத்திய அதிகாரி வைத்தியர் நிமால் அருமைநாதன் தெரிவித்தார்.

சுகாதாரப் பணியாளர்கள், ஆடைத் தொழிற்சாலைப் பணியாளர்கள், 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் இதில் உள்ளடங்குவதாகத் தெரிவித்த அவர், இவர்களில் 60 வயதுக்கு மேற்பட்டவர்கள், ஆடைத் தொழிற்சாலைப் பணியாளர்கள் என 5,011 பேருக்கும் சுகாதாரப் பணியாளர்கள் 831 பேருக்கும் தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

இதில், சுகாதாரப் பணியாளர்கள் 781 பேருக்கு இரண்டாவது தடுப்பூசியும் செலுத்தப்பட்டுள்ளதாகவும், நிமால் அருமைநாதன் தெரிவித்தார்.

## பெசில் ராஜபக்ஷவுக்கு கிழக்கில் அமோக வரவேற்பு




■ வ.சக்தி, எம் எஸ் எம் நூர்தீன், பாறுக் ஷிஹான்

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன கட்சியின் ஸ்தாபகர் பெசில் ராஜபக்ஷ, நேற்று (08) பாராளுமன்றஉறுப்பினராகவும் நிதி அமைச்சராகவும் பதவிப்பிரமாணம் செய்துள்ளார்.

இதனையடுத்து, அவரது ஆதரவாளர்கள் பல பகுதிகளிலும் இருந்து அவருக்கு வாழ்த்துத் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், மட்டக்களப்பு மாவட்டத்தின் களுவாஞ்சிகுடி நகரில் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளர் பரமசிவம் சந்திரகுமாரின் ஏற்பாட்டில், கட்சியின் ஆதரவாளர்கள் ஒன்றிணைந்து, நிதி அமைச்சர் பெசிலுக்கு, பதாகைகளை வைத்துள்ளனர்.

பொதுஜனப் பெரமுன கட்சியின கொடிகள் தொங்க விடப்பட்டு, பட்டாசு கொளுத்தி, ஆதரவாளர்கள் அமோக வரவேற்பளித்தனர்.

அத்தோடு, அம்பாறை மாவட்டத்தின் கல்முனையிலும் பெசிலை வரவேற்கும் பதாகைகள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

## களுதாவளையில் விபத்து; மூவர் காயம்

■ வ.சக்தி

மட்டக்களப்பு, களுவாஞ்சிகுடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மட்டக்களப்பு-கல்முனை பிரதான வீதியின் களுதாவளையில் நேற்று (08) நண்பகல் இடம்பெற்ற விபத்தில் மூவர் காயமடைந்து, களுவாஞ்சிகுடி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என களுவாஞ்சிகுடி பொலிஸார் தெரிவித்தனர்.

களுதாவளையிலிருந்து களுவாஞ்சிகுடி நோக்கிப் பணித்த மோட்டார் சைக்கிள் ஒன்றும், கல்லாறு பகுதியிலிருந்து மட்டக்களப்பு நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோத்திக் கொண்டத்தில் இவ்விபத்து சம்பவித்துள்ளது.

இதன்போது பெண்ணொருவர் உட்பட மூவர் காயமடைந்துள்ளனர்.


விபத்து இடம்பெற்ற இடத்துக்கு வருகைதந்த களுவாஞ்சிகுடி போக்குவரத்துப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.



முகமாலையில்

## வாள்வெட்டுக்குழு அட்டகாசம்

■ செ.கீதாஞ்சன்



கிளிநொச்சி - பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட முகமாலை பகுதியில், நேற்று முன்தினம் (07) இரவு 11 மணியளவில், வீடொன்றுக்குள் புகுந்து வாள்வெட்டுக் குழுவினர் மேற்கொண்ட அட்டகாசத்தில், ஒருவர் வாள்வெட்டுக்கு இலக்காகியுள்ளார்.

இதில் படுகாயமடைந்த நபர், பளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, பின்னர் மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

அத்துடன், வீட்டில் இருந்த இன்னொரு நபருக்கும் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதுடன், வீட்டு உடமைகளும் அடித்து நொறுக்கப்பட்டுள்ளன.

இதையடுத்து, இது தொடர்பாக விரைந்து செயற்பட்ட முகமாலை இராணுவத்தினரும் பொலிஸாரும் சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணைகளை முன்னெடுத்தமை குறிப்பிடத்தக்கது.

## மின்சாரம் தாக்கி பெண் பலி

■ செ.கீதாஞ்சன்



முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு பிரதேசத்துக்குட்பட்ட சுதந்திரபுரம், கொலனி பகுதியில், நேற்று முன்தினம் (07) மின்சாரம் தாக்கி 29 வயதுடைய இளம் தாய் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இரண்டு பிள்ளைகளின் தாயே, தோட்டத்தில், வேலை செய்துகொண்டிருந்த போதே, இவ்வாறு மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளார்.

மின்சாரக் கசிவு காரணமாக இந்த அனர்த்தம் சம்பவித்துள்ளதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

## ‘கிழக்கில் டெல்டா இல்லை’

■ ஹஸ்பர் ஏ ஹலீம்



கிழக்கு மாகாணத்தில் டெல்டா வைரஸ் எவருக்கும் பரவவில்லை என கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி டொக்டர் ஏ.ஆர்.எம். தௌபீக் தெரிவித்தார்.

எனினும், கொவிட் - 19 வைரஸ்களைத் தடுப்பதற்கான நடைமுறைகளை மக்கள் பேண வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்

கிண்ணியா தள வைத்தியசாலையில் நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், “தற்போதைய நிலையில் அன்டிஜன் மற்றும் பி.சி.ஆர் மாதிரிகள் பெறப்படுவது குறைவாகவுள்ளது. எனவே மக்கள் கவனயீனமாக இருக்காமல் உங்களை பாதுகாத்துக் கொள்ளுங்கள்” என்றார்.

திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் இரண்டாம் கட்ட தடுப்பூசி ஏற்றும் பணி, நேற்று (08)முதல் முன்னெடுக்கப்படுவதாகவும் 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் கட்டாயம் இதனை பெறவேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

“இதுவரைக்கும் தடுப்பு மருந்துகளை பெற்றவர்களில் எவருக்கும் பக்கவிளைவுகள் எதுவும் ஏற்படவில்லை. எனவே, பயமில்லாமல் தடுப்பு மருந்துகளைப் பெற்றுக் கொள்ளவும்.

எதிர்வரும் காலங்களில் அரச சார்பற்ற நிறுவனங்களில் பணிபுரியும் முன்னிலை உத்தியோகத்தர்கள், சுகாதாரத் திணைக்கள உத்தியோகத்தர்களின் நெருங்கிய உறவினர்கள் மற்றும் பாடசாலை ஆசிரியர்கள், கல்வி சாரா ஊழியர்கள் ஆகியோருக்கு தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகளும் இடம்பெறவுள்ளது என்றார்.

வவுனியா விபத்தில்

## மஸ்கெலியா இளைஞன் பலி

■ க. அகரன்

வவுனியா - புளியங்குளம் பகுதியில் நேற்று (08) காலை இடம்பெற்ற விபத்தில், மஸ்கெலியா பகுதியைச் சேர்ந்த பிரவீன் (வயது 21) என்ற இளைஞன் உயிரிழந்துள்ளார்.

கிளிநொச்சியில் இருந்து புத்தளம் நோக்கி பொருள்களை ஏற்றிச்சென்ற பாரவூர்தியொன்று, புளியங்குளம் பகுதியில் சென்றுகொண்டிருந்த போது, கட்டுப்பாட்டை இழந்து குடைசாய்ந்து விபத்துக்குள்ளாகியது.

இந்த விபத்தில் பாரவூர்தியின் சாரதியும் இளைஞனும் படுகாயமடைந்த நிலையில் மீட்கப்பட்டு, வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

எனினும், சிகிச்சை பலனின்றி இளைஞன் உயிரிழந்துள்ளதாக, புளியங்குளம் பொலிஸார் தெரிவித்தனர்.

தடையை மீறி ஹட்டனில் ஆர்ப்பாட்டம்

# கைதான 4 பேருக்கும் பிணை

■ எஸ்.கணேசன், எம். கிருஸ்ணா

சேர் ஜோன் கொத்தலாவ தேசிய பாதுகாப்புப் பல்கலைக்க ழகச் சட்டமூலத்தை உடன் வாபஸ் பெறுமாறு வலியுறுத்தி ஹட்டன் மணிக்கூட்டு கோபுரச்சந்திக்கு முன்பாக மக்கள் விடுதலை முன்னணியினர், நேற்று (8) ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டபோது, கைது செய்யப்பட்ட அக்கட்சியின் செயற்பாட்டாளர்கள் நாலவரும் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தை ஏற்பாடு செய்த நுவரெலியா மாவட்ட அமைப்பாளர், அம்பகமுவ பிரதேச சபையின் எதிர்க்கட்சி உறுப்பினர் மஞ்சுள சுரவீர ஆராச்சி, அகில இலங்கை தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் உப செயலாளர் தமிழ்ச் செல்வி, கொத்மலை பிரதேச சபையின் உறுப்பினர்களான ஜயரத்ன, கபலி பண்டார ஆகியோரே நால்வரே கைதுசெய்யப்பட்டு பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட நால்வரும் ஹட்டன் மாவட்ட நீதவான் நிமேசா பட்டபெந்திகே முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டதையடுத்து, அவர்களை தலா 3 இலட்ச ரூபாய் சரீரப் பிணையில் விடுதலை செய்ய உத்தரவிட்டதுடன், இந்த வழக்கை செப்டம்பர் மாதம் 7ஆம் திகதிக்கு விசாரணைக்கு எடுப்பதாக அறிவித்தார்.

மேலும் பிணையில் விடுவிக்கப்பட்டவர்களை 14 நாள்கள் சுயதனிமையில் இருக்குமாறும் உத்தரவிடப்பட்டுள்ளது.



அமலில் இருக்கும் தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறினர் என்றக் குற்றச்சாட்டின் கீழே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

இந்த சட்டமூலம் பாராளுமன்றத்தில் நேற்று (08) சமர்ப்பிக்கப்பட்டது.

மாணவிக்கு தனியாக பாடம் எடுக்கச் சென்ற

# அதிபர் கைதாகி பிணையில் விடுதலை

■ என்.ஆராச்சி

தெரணியகல பிரதேசத்தில் 17 வயது பாடசாலை மாணவியொருவர், பாடசாலை அதிபர் ஒருவரால் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில், சந்தேகநபரான அதிபர் கைதுசெய்யப்பட்டு, பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

இம்மாதம் 5ஆம் திகதி பாதிக்கப்பட்ட மாணவியும் அவரது தாயாரும் தெரணியகல பொலிஸ் நிலையத்தில் வழங்கிய முறைப்பாட்டுக்கு அமைய, 6ஆம் திகதி சந்தேகநபரான அதிபர் கைதுசெய்யப்பட்டார்.

அவரை, அவிசாவளை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டதையடுத்து, இரண்டு இலட்சம் ரூபாய் சரீரப் பிணையில் விடுதலை செய்யுமாறு, நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

வீட்டில் யாருமில்லாத நேரத்தில், பாடமொன்றை கற்பிப்பதற்காக, தெரணியகல- பிரதேசத்திலுள்ள மாணவியின் வீட்டுக்குச் சென்ற அதிபர், மாணவியைத் துஷ்பிரயோகப்படுத்தியதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

அத்துடன், 50 வயதான அதிபரை, இந்த மாதம் 29ஆம் திகதி நீதிமன்றில் ஆஜராகுமாறும் உத்தரவிடப்பட்டுள்ளது.

# பல பிரதேசங்களில் ஜே.வி.பி ஆர்ப்பாட்டம்



■ உமாமகேஸ்வரி, என்.ஆராச்சி, சுமணசிறி குணதிலக, ரஞ்சித் ராஜபக்ஸ, மஹேஸ் கீர்த்திரத்ன

ஜோன் கொத்தலாவல பல்கலைகழகம் தொடர்பாக அரசாங்கம் கொண்டு வந்த தீர்மானத்திற்கெதிராக, நாட்டின் பல பிரதேசங்களிலும் மக்கள் விடுதலை முன்னணியினால், நேற்று (08) ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

இதற்கமைய, ஹட்டன், இரத்தினபுரி , கேகாலை, மொனராகலை, மாத்தளை உள்ளிட்ட பல பிரதேசங்களில் இந்த ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

இந்த ஆர்ப்பாட்டத்தின் போது, அரசாங்கத்துக்கு எதிராக கோஷங்கள் எழுப்பியதுடன், பாதாகைகளையும் ஏந்தி இருந்தனர்.













தடுப்பூசி ஏற்றிக்கொள்ளாதவர்களுக்கு

# இன்றும், நாளையும் வாய்ப்பு

■ எம்.கிருஸ்ணா

நுவரெலியா மாவட்டத்தில் முதலாம் கட்ட கொவிட் -19 தடுப்பூசியை ஏற்றிக்கொள்ளாதவர்கள் இன்றும் (09) நாளையும் (10) ஏற்றிக்கொள்ள முடியுமென கொட்டகலை பொது சுகாதார வைத்திய அதிகாரி ஆர். சுதர்சன் தெரிவித்துள்ளார்.

கொட்டகலை பொது சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் முதற்கட்ட சினோர்ஃபாம் தடுப்பூசியை ஏற்றிக்கொள்ள தவறிய கொட்டகலை, பத்தனை கிராம சேவகர் பிரிவுகளை சேர்ந்தோர் காலை 09 மணி முதல் நன்பகல் 12 மணிவரை கொட்டகலை ஆதார வைத்தியசாலையில் தடுப்பூசியை ஏற்றிக்கொள்ள முடியுமென வைத்திய அதிகாரி வைத்தியர் சுதர்சன் தெரிவித்துள்ளார்.

# மக்கள் பாவனைக்காக ...



■ பி.கேதீஸ்

கொட்டகலை பிரதேச சபையின் 500,000 ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் புனரமைக்கப்பட்ட தலவாக்கலை –பாமஸ்டன் ரட்ணகிரிய வீதியானது, கொட்டகலை பிரதேச சபையின் தலைவர் ராஜாமணி பிரஷாந்தால், மக்கள் பாவனைக்காக திறந்துவைக்கப்பட்டது.

கொரோனா நிலையத்துக்கு

# கஞ்சா எடுத்துச் சென்றவர் கைது

■ ஏ.ஏ.எம்.பாயிஸ்

கொரோனா தொற்றாளர்கள் தங்கியிருக்கும் சிகிச்சை நிலையம் ஒன்றுக்கு, கஞ்சா, பீடி மற்றும் புகையிலை ஆகியவற்றைக் கொண்டு செல்ல முற்பட்ட சந்தேகநபர் ஒருவரை, காவத்தை பொலிஸார், நேற்று முன்தினம் (06) கைது செய்துள்ளனர்.

காவத்தை - வெல்லத்துரயில் அமைந்துள்ள தேசியக் கல்வியற் கல்லூரி கொரோனா சிகிச்சை நிலையத்துக்கு இவற்றை எடுத்துச் செல்ல முயற்சித்த போதே, சந்தேகநபர் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

இவரிடமிருந்து 3 கிராம் கஞ்சா, இரண்டு பீடிக்கட்டுகள், ஒரு தீப்பெட்டி மற்றும் ஒரு புகையிலைக் கட்டு ஆகியவற்றையும் பொலிஸார் கைப்பற்றினர்.

இதேவேளை, இச்சந்தேகநபர் இவற்றை யாருக்கு எடுத்துச் சென்றார் என்பது தொடர்பில், பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

பிளானிவத்தையில்

# இரு லயன்கள் முடக்கப்பட்டன

■ எம். செல்வராஜா, நடராஜா மலர்வேந்தன்

பசறை பிளானிவத்தை தோட்டத்தில் 11 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டதையடுத்து, இரண்டு லயன் குடியிருப்புகளை தனிமைப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதென, பிரதேச பொது சுகாதாரப் பரிசோதகர் எஸ். ஜெயக்குமார் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் (07) பசறையில் 30 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்ட நிலையில், இவர்களுள் 11 பேர் பிளானிவத்தை தோட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் இவர்கள், பிந்துனுவெவ கொரோனா சிகிச்சை நிலையத்துக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன், குறித்த 11 பேருடன் தொடர்பைப் பேணிய 60 சுய தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாகவும் விரைவில் இவர்களுக்கும் பி.சி.ஆர் பரிசோதனைகள் முன்னெடுக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

நோர்வூட்டில்

# ‘சௌபாக்கியா’ வேலைத்திட்டம்



நோர்வூட் பிரதேசத்தில் பால் உற்பத்தி மற்றும் அதைக் கொண்டு தயாரிக்கப்படும் பொருள்களை சந்தைப்படுத்தி, மக்களின் வாழ்வாதாரத்தைப் பெருக்குவதற்கு வழிவகுக்கும் வகையில் “சௌபாக்கியா” வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்த ஒரு கோடி ரூபாய் நிதியை ஒதுக்கிக் கொடுத்துள்ள ஜனாதிபதிக்கும், அதற்குக் காரணமாக இருந்த இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமானுக்கும் நோர்வூட் பிரதேச சபைத் தலைவர் கே. குழந்தைவேல் ரவி நன்றி தெரிவித்துள்ளார்.

நோர்வூட் பிரதேச சபைக்கு உட்பட்ட வெஞ்சர் பகுதியில் “சௌபாக்கியா” பால் உற்பத்தி கிராம வேலைத் திட்டத்தின் கட்டிடத்துக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வில், பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு கருத்துரைக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், “ஜனாதிபதியின் தூரநோக்கு சிந்தனையின் கீழ் மலையகத்தில் பால் உற்பத்தியைப் பெருக்கவும் அதன் ஊடாக பால் தயாரிப்புகளான பாற்கட்டி, பால் டொபி, யோகட் முதலான உற்பத்திகளை அதிகரித்து மக்களின் வாழ்வாதாரத்துக்கு உதவவும் ஒரு கோடி ரூபாய் நிதியை ஒதுக்கிக் கொடுத்துள்ளார்.

“பால் உற்பத்தியாளர்களை ஊக்குவிக்கும் வகையில், பசுமாடுகளை வளர்ப்பதற்காக, தலா 50 ஆயிரம் ரூபாய் வீதம் 50 பேருக்கு காசோலைகளும் வழங்கப்பட்டுள்ளன.

“ கோட்டாபய ராஜபக்ஷ, ஜனாதிபதியாகபதவியேற்ற பிறகு மலையகப் பகுதிகளில் காபெட் பாதைகள், பாலங்கள், மைதானங்கள் என பல அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.


“அதேபோல், “சௌபாக்கியா” வேலைத் திட்டத்துக்கான சிபாரிசை இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் மேற்கொண்டிருந்தார். இத்திட்டத்தின் ஊடாக பலருக்கு வேலை வாய்ப்புகள் கிடைக்கவுள்ளன. வருமான அதிகரிப்புக்கும் வாய்ப்புக் கிடைத்துள்ளது” என்றார்.

# அமைச்சர் பெசிலுக்கு செந்தில் வாழ்த்து

நிதி அமைச்சராக நேற்றைய தினம் பதவிப்பிரமாணம் செய்துகொண்ட அமைச்சர் பெசில் ராஜபக்ஷக்கு, பெருந்தோட்டங்களுக்கான பிரதமரின் ஒருங்கிணைப்புச் செயலாளரும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் உப தலைவருமான செந்தில் தொண்டமான் வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் செந்தில் தொண்டமான் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது,

“அவர், பொருளாதார அபிவிருத்தி அமைச்சராகப் பதவி வகித்த காலப்பகுதியில், மக்களுக்குத் தேவையான அபிவிருத்திகளையும் வேலைத்திட்டங்களையும் சரியாகவும் முறையாகவும் முன்னெடுத்தவர் என்ற பெருமை அவருக்கு உண்டு.



“பெசில் ராஜபக்ஷவின் அரசியல் மீள் பிரவேசம், மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளதோடு, அரசாங்கத்தின் மீதான எதிர்பார்ப்பையும் மேலும் அதிகரிக்கச் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது” என, செந்தில் தொண்டமான் அந்த அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளார்.

புதிய அமைச்சருக்காக

# பூஜாப்பிட்டியவில் பட்டாசு வெடித்தது

■ மொஹமட் ஆஸிக்

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பெசில் ராஜபக்ஷ, நேற்று (8) நிதி அமைச்சராக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டதையடுத்து, கண்டி- பூஜாப்பிட்டிய நகரில், ஆதரவாளர்கள் பட்டாசு கொளுத்தி, தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.

பூஜாப்பிட்டிய பிரதேச சபையின் தலைவர் அநுர பெர்ணான்டோ தலைமையில், இந்நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.



# 12 காத்திருப்புக்கு முன்தாவிய புதியவர் சவால்களை வெல்வாரா?

புதிய நிதியமைச்சராக சத்தியப்பிரமாணம் செய்துகொண்ட பெசில் ராஜபக்ஷவின் மீள்வருகை, ஆளும் கட்சியிலிருக்கும் பலருக்கு ஒருவகையான மனசங்கடங்களை ஏற்படுத்தியிருந்தாலும், அவருக்கு முன்பாக இருக்கும் சவால்களை முறியடித்துகொண்டு அவர், வெல்வரா? அல்லது பெயில் ஆகுவரா? என்பதற்கெல்லாம் காலமே பதில்சொல்லும்.

மிகவும் நெருக்கடியான காலக்கட்டத்தில், நிதியமைச்சை பொறுப்பேற்றிக்கும் அவர், தோல்வியடைந்துவிட்டால் “பெசில் பெயில்” என கோஷமெழுப்புவது எதிரணியினருக்கு மிகவும் இலகுவானது, ஆகையால், கத்தியின் மீதே அவர் நடக்கவேண்டியிருக்கிறது.

சட்டத்தில் இருக்கும் ஓட்டைகளைப் பயன்படுத்தி, குற்றங்களில் இருந்து தப்பித்துக் கொள்வது, கெட்டித்தனம் என்றோ சுழியோடும் வல்லமை என்றோ பாராட்டப்படுவது எவ்வளவு கீழ்த்தரமானது என்று, அதன் பாதக விளைவுகளைக் கொண்டு அறிந்து கொள்ளலாம். சட்ட ஓட்டைகளுக்குள் புகுந்து தாம் நினைத்தவற்றைச் சாதித்துக்கொள்வது, ஒருபோதும் நற்கனிகளைத் தராது.

சட்டத்தில் இருக்கும் ஓட்டைகளுக்குள் புகுந்து விளையாடும் சட்டவாளர்களின் வாதத்திறன், நிரபராதிகள் தண்டனை பெறவும் குற்றவாளிகள் விடுதலை பெறவும் காரணமாக அமைந்துள்ளது. ஜீ.ஜீ பொன்னம்பலத்தின் யானைத் தீப்பெட்டி வழக்கு, இதற்கு சிறந்த உதாரணம். ஐந்து சதமாக விற்பனை செய்யப்படவேண்டிய தீப்பெட்டி, 10 சதமான விற்பனை செய்யப்பட்டுள்ளது. இந்த மோசடி, வியாபாரிக்காக, நீதிமன்றத்தில் ஜீ.ஜீ வாதாடினார். “ஒரு யானை தீப்பெட்டிதான் ஐந்து சதம். பெட்டியில் இரண்டு யானைகள் உள்ளன. எனவே 10 சதமாக விற்பனை செய்தமை, தவறில்லை” எனக் கூறி, வியாபாரிக்கு விடுதலை வாங்கிக்கொடுத்தார்.

2020 பொதுத்தேர்தலின்போது, ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவால் சமர்ப்பிக்கப்பட்ட தேசிய பட்டியல் பெயர்ப் பட்டியலில் 29 பேரின் பெயர்கள் அடங்கியிருந்தன. அந்தத் தேர்தல் முடிவுகளின் பிரகாரம், 68,53,693 வாக்குகளை 17 பேர், தேசிய பட்டியல் ஊடாகப் பாராளுமன்றம் செல்லும் தகுதியைப் பெற்றார்கள். மிகுதி 12 பேர் காத்திருப்புப் பட்டியலில் இருக்கின்றனர்.

ஆனால், தேசிய பட்டியல் பாராளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்பட்ட ஒருவர் இராஜினாமாச் செய்தால், இந்த 12 பேரில் ஒருவரே பாராளுமன்ற உறுப்பினராக வேண்டும். ஆனால், பொதுஜன பெரமுன சமர்ப்பித்த பட்டியலில் பெயர் குறிப்பிடப்பட்டிராத ஒருவர், எந்த அடிப்படையில் பாராளுமன்ற உறுப்பினரானார் என்பதே தற்போது எழும் கேள்வியாக உள்ளது.

வரிசையில் காத்திருக்கும் 12 பேரும் அந்தப் பட்டியலில் இருந்து தாங்கள் விலகிக் கொள்கிறோம் என்று எழுத்து மூலம் தேர்தல் ஆணையாளருக்கு அறிவிக்கும் பட்சத்தில், பட்டியலில் இல்லாத ஒருவரின் பெயர் புதிதாகச் சேர்க்கப்பட்டு, பாராளுமன்ற உறுப்பினராக பதவிப்பிரமாணம் செய்வதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன.

இலங்கையின் அரசமைப்பின் 99 ஏ பிரிவின் படி, தேசிய பட்டியலில் இடம்பெறாத ஒருவரை பாராளுமன்ற உறுப்பினராக நியமிப்பது, மக்களின் இறையாண்மையாக இருக்கும் வாக்களிப்பு உரிமையை மீறும் செயல் என்று மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் தெரிவித்துள்ளது. ‘அவதந்திரம் தனக்கு அந்தரம்’ என்பது, அன்றும் இன்றும் உண்மையாகவே இருக்கிறது; நாளையும் அது உண்மையாகவே இருக்கும்.



தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு
எழுதுங்கள்

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk







## வாழ்வியல் தரிசனம்

ஒரு பரதேசி சாலைவழியாக கம்பீரமாக விசுக், விசுக்கென நடந்து போய்க்கொண்டிருந்தார். அவரைக்கண்ட ஒருவர், அவரைக் கேலியாக நோக்கி, எங்கே போய் வருக்கின்றீர் எனக் கேட்டதும், அவரோ பட்டென்று, சொர்க்கத்துக்குப் போய் வருகின்றேன் என்றார்.

அங்கே உங்களுக்கு என்ன வேலை என்றான். அவரும் அதுதான் திரும்பி வருகின்றேன் என்று சொன்னார். அவனும் விடுவதாக இல்லை. அப்படியானால், நகரத்துக்குப் போவதுதானே என்றான்.

அவரோ, ஆமாம் நான், அங்கும் சென்றேன். அங்கே உங்களைப் போன்ற குடிகாரர்கள். போக்கிரிகள், போதை வஸ்துப் பாவனையாளர்கள் எனப் பல பாவிகளைக் கண் டேன். மனம் கேட்கவில்லை. இனியாவது நல்லபுத்தி வரட்டும் என வாழ்த்திவிட்டு வந்துவிட்டேன் என்றார். அப்புறமென்ன அங்கிருந்து நழுவினான் அவன்.

தானும் தன்டப்பாடுமாகச் சென்ற நல்ல மனிதர்களைச் சுரண்டி துன்பப்படுத்தும் கெட்டவர்கள் அநேகர். எதனைப் பற்றிக் கவலைப்படாமல் துணிவுடன் செல்பவனே மனிதன்.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

இலங்கையில் சீனா:

# விளங்கிக் கொள்ளலும் வினையாற்றலும்



தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

இலங்கையின் சீனாவின் ஆதிக்கம் இப்போது முக்கிய பேசுபொருளாகியுள்ளது. இலங்கையின் தற்போதைய கவலைக்கிடமான நிலைக்கு சீனாவே காரணம் என்று கருதுபவர்கள் இருக்கிறார்கள்.

இந்தியாவை மீறி, இலங்கையில் அதிகரிக்கும் சீனா ஆதிக்கம் தமிழர்களுக்கு ஆபத்தானது என நினைப்பவர்கள் இருக்கிறார்கள். இலங்கையை இந்தியாவுக்கோ அமெரிக்காவுக்கோ தாரைவார்த்தாலும் சீனாவை இலங்கையில் அனுமதிக்கக்கூடாது என்று கூறுபவர்கள் இருக்கிறார்கள்.

இவ்வாறு, சீனா குறித்த பல கருத்துகளை நாளும் நாம் கேட்கவும் வாசிக்கவும் கிடைக்கிறது. இங்கு மூன்று கேள்விகள் எழுகின்றன.

முதலாவது, நாம் சீனாவை விளங்கி இருக்கிறோமா?

இரண்டாவது, ஏற்கெனவே இருக்கின்ற சட்டகங்களின் வழி, சீனாவை விளங்கிக் கொள்ளவியலுமா?

மூன்றாவது, சீனாவுக்கு நாம் எவ்வாறு எதை எப்போது வினையாற்றுவது?

இந்த மூன்று கேள்விகளையும் சற்று விரிவாக, பகுதிகளாக ஆராயும் முயற்சியின் தொடக்கமிது.

இலங்கையில் சீனாவின் ஆதிக்கம் குறித்து, இலங்கையின் முதன்மையான அரசறிவியலாளரான பேராசிரியர் ஜெயதேவ உயன்கொட, “இலங்கையில் சீனாவின் அதிகரிக்கும் கரிசனை, அரசியலை விடப் பொருளாதார நோக்கங்களை அதிகமாகக் கொண்டது. சீனா பொருளாதார தர்க்கத்தின் (economic logic) அடிப்படையிலேயே செயற்படுகிறது. அதனடிப்படையில் அது இலங்கையில் அதிகளவான பொருளாதார மூலதனத்தை விரும்புகிறது. இலங்கையர்கள், அமெரிக்க கண்ணுடன் சீனாவைப் பார்க்கக்கூடாது. சீனாவை வில்லனாக்குவது அதிகளவில் இடம்பெறுகிறது. சீனாவை வில்லனாகச் சித்திரிப்பது அமெரிக்காவின் புதிய கெடுபிடிப்போரின் வெளிப்பாடு. சீனாவுடனான இந்தியாவின் முரண்பாடு இதன் ஒரு பகுதியே” என்று கூறுகின்றார்.

பேராசிரியர் உயன்கொட, சில முக்கியமானதும் ஆழமானதுமான செய்திகளை இங்கே சுருக்கமாகச் சொல்லியிருக்கிறார்.

மாஓ சேதுங் தனது வழிகாட்டலில் முன்னகர்த்திய சீனாவுக்கும் அவரது மறைவுக்குப் பின்னர், டென்சியோபிங் முன்னெடுத்த முதலாளித்துவத்தை நோக்கிய பொருளாதார அரசியல் மாதிரியில் அமைந்த சீனாவுக்கும் வேறுபாடுகள் அதிகம். இந்த வேறுபாட்டை உணராதவர்கள் தான், இன்னமும் ‘சோசலிச சீனா’ என்று சொல்கிறார்கள்.

சீனாவின் வரலாற்றின் முக்கிய அம்சம், 1949ஆம் ஆண்டு நிகழ்த்தப்பட்ட புரட்சியாகும். உலக வரலாற்றில் ரஷ்ய புரட்சிக்குப் பின்னரான அதிமுக்கிய அரசியல் நிகழ்வு சீனப் புரட்சியாகும்.

1949ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் முதலாம் திகதி அந்நிய ஆட்சியைத் தூக்கியெறிந்து நிகழ்த்திய சீன விடுதலைப் பிரகடனம், சீனாவின் விடுதலையை மட்டுமன்றிக் கொலனி ஆட்சிக்கு உட்பட்ட ஒவ்வொரு நாட்டிலும் வருவதற்கிருந்த விடுதலை எழுச்சிகளையும் எடுத்துரைப்பதாக அமைந்தது.

சீனா பற்றிய தகவல் திரிபு, இந்தியாவில் 1961ஆம் ஆண்டு முதல் தீவிரமாக இருந்து வந்துள்ளது. சீனாவிலிருந்து வெளிவருகிற நூல்கள், சஞ்சிகைகள் மீது தடை இருந்து வந்துள்ளது. இவை, அண்மைக் காலங்களில் கணிசமான நெகிழ்வுக்கு உட்பட்டாலும் சீனாவைப் பகைமையாக நோக்குகிற போக்குக்குப் பின்னால், இந்திய மேலாதிக்க நிறுவனமும் இப்போது அமெரிக்காவுடனான நெருக்கமும் பெரிய காரணங்களாக உள்ளன.

இந்தப் போக்கு, ஈழத்தில் தமிழர்கள் மத்தியிலும் இருந்தது. இந்தியாவின் கண்களின் ஊடாக, சீனாவைப் பார்க்கும் போக்கின் விளைவு இது. ஈழத்தில் தமிழ்த் தேசியவாதிகளிடையே, சீன எதிர்ப்புக்கு முக்கியமான காரணம் இத்தேசியவாதிகளின் சமூகநீதி மறுப்பையும் உயர்வர்க்க நடைமுறைகளையும் எதிர்த்தும் அம்பலப்படுத்தியும் வந்தவர்கள் இடதுசாரிகளாவர்.

கம்யூனிஸ்ட் கட்சியும் சமசமாஜக் கட்சியும் சீரழிந்து போன பிறகு, ‘சீன சார்பு’ கம்யூனிஸ்ட்டுகள் எனப்பட்டோரே, இலங்கையின் வடக்கில் காத்திரமான இடதுசாரிகளாக இருந்தனர். இதுவே தமிழ்த் தேசியவாதிகளுக்கு மிகுந்த சங்கடத்தைக் கொடுத்தது. 1960கள் தொட்டு, தமிழர்களிடையே சீனவிரோதம் தீவிரமாகப் பரப்பப்பட்டது.

இதில் கவனிக்கத்தக்க விடயமொன்றுண்டு. சீனா ஏகாதிபத்திய எதிர்ப்பின் அதி முக்கியமான சக்தியாக இருந்த 1960களிலும் 1970களிலும் தமிழ்த் தேசியவாதிகளின் சீன எதிர்ப்பு, மிகத் தீவிரமாக இருந்தது. அந்த எதிர்ப்பை நாம், அவர்களது ஏகாதிபத்தியச் சார்பான பார்வையிலிருந்து பிரித்துப் பார்க்க இயலாது. அது, உலகின் சகல கொலனிய எதிர்ப்புப் போராட்டங்களிலும் அக்கறையின்மையாக வெளிப்பட்டது.

அமெரிக்க ஆக்கிரமிப்புக்கு எதிரான போராட்டங்களைக் கம்யூனிச வன்முறையாகவும் அமைதியைக் குலைக்கும் கலவரங்களாகவும் அது காண முற்பட்டது. உலகின் எந்த மூலையில் நடந்த விடுதலைப் போராட்டத்தையும் ஆதரிக்க முன்வராத தமிழ்த் தேசியவாதம் சீனாவிலும் சோவியத் யூனியனிலும் கிளறிவிடப்பட்ட கலவரங்களை மெச்சத்தவறியதில்லை. உலகின் பல நாடுகளில் நடந்த விடுதலைப்போராட்டங்களை அங்கிகரிக்காத ஆதரவு வழங்காத வரலாறு தமிழ்த் தேசியவாதிகளின் வரலாறு.

சீனாவை விளங்குவதற்கு சீனாவின் அயலுறவுக் கொள்கைகளை விளங்குவது பிரதானமானது. அதன்வழியே சீனாவின் நடத்தையை விளங்கிக் கொள்ள முடியும். சீனாவின் அயலறலுக் கொள்கை சீனப் புரட்சியைத் தொடர்ந்து 1950களில் ஐந்து அடிப்படைகளில் உருவாக்கப்பட்டது.

1. நாடுகளது இறைமையையும் பிரதேச ஒருமைப்பாட்டையும் பரஸ்பரம் மதித்தல்
2. பரஸ்பர ஆக்கிரமிப்பின்மை
3. ஒருநாடு மற்றதன் உள் அலுவல்களில் தலையிடாமை
4. சமத்துவமும் பரஸ்பர நன்மையும்
5. சமாதானமாக உடனிருத்தல்

இவையே சீனாவின் அயலுறவுக் கொள்கைகளைத் தீர்மானிப்பவையாக இருக்கின்றன. இந்த அணுகுமுறை, மேற்குலக நாடுகளினதும் இந்தியாவினதும் அணுகுமுறையிலிருந்து மிகவும் வேறுபட்டது.

இன்று, சீனா சோசலிசத்திலிருந்து நகர்ந்துவிட்டபோதும் இதன் அம்சங்களே இன்றும் சீனாவை வழிநடத்துகின்றன. இவ்வடிப்படைகளே கெடுபிடிப்போர் உச்சமடையத் தொடங்கியதன் பின்னர், உருவான மூன்றாவது அணியான அணிசேரா நாடுகளாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட சர்வதேச உறவுகளுக்கான அடிப்படையாயிற்று.

இங்கு கவனிக்க வேண்டியது, சீனாவின் அயல் உறவுகளின் தன்மை கடந்த கால் நூற்றாண்டுக்குள் சீனாவின் பொருளாதாரம் கண்ட பெரும் மாற்றத்தாலும் அதன் விளைவான பெரிய ஆனால் சமனற்ற வளர்ச்சியால் பாதிக்கப்பட்டுள்ளது.

சீனா இன்று எண்ணெய் உட்பட பல்வேறு மூலப் பெருட்களின் உற்பத்தியின் மீது தங்கியுள்ளது. அதை விடச், சீனாவின் வணிக நிறுவனங்கள் மூன்றாமுலக நாடுகளில் பெருமளவில் அளவில் முதலீடுகளைச் செய்துள்ளன. எனவே சீனாவுக்குத் தனது அயல் வணிகத்தையும் முதலீடுகளையும் காப்பாற்றும் ஒரு நிர்ப்பந்தம் உள்ளது. இன்றுவரை சீனா இராணுவ முறையில் அதைக் கையாள முற்படவில்லை என்பது கவனிக்கத்தக்கது. இவ்வகையில் அமெரிக்காவின் அயலுறவுக் கொள்கையில் இருந்து சீனா வேறுபட்டு நிற்கிறது.

இலங்கையுடனான சீனாவின் உறவு மிக நீண்டதும் முக்கியமானதுமாகும். கொரியப் போரின் போது அமெரிக்கா சீனாவுக்கு எதிரான வணிகத் தடையை விதித்திருந்த நிலையில் அதை மீறி, இலங்கையின் அன்றைய நிதி நெருக்கடியைச் சமாளிக்க சீனாவுடன் ‘அரிசி- இறப்பர் வர்த்தக உடன்படிக்கை’ ஒன்றை ஆட்சியிலிருந்த ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கம் 1952ஆம் ஆண்டு செய்து கொண்டது.

இலங்கைக்கு மிகவும் சாதகமான முறையில் சீனா வாங்கும் விலையை உலகச் சந்தையை விடக் கூடுதலாகவும் இலங்கை வாங்கும் விலையைக் குறைவாகவும் நிர்ணயித்தது. இதன் பலன்களை இருபதாண்டுகளுக்கு மேலாக இலங்கை அனுபவித்தது. இதுவே இலங்கை-சீன நட்புறவின் அத்திவாரமாகியது. இன்றுவரை இலங்கை செய்துகொண்ட வர்த்தக உடன்படிக்கைகளில் இலங்கைக்கு மிகுந்த பயன்விளைவித்ததும் நீண்டகாலம் நிலைத்ததுமான உடன்படிக்கை இதுவென்பது குறிப்பிடத்தக்கது.

இந்த உடன்படிக்கையையொட்டி நிகழ்ந்த நிகழ்வுகள் இலங்கை வரலாற்றை அறிய விரும்புபவர்களுக்கு மிகவும் முக்கியமானது. எஸ்.பி. அமரசிங்கம் எழுதிய *‘Rice and Rubber: The Story of China-Ceylon Trade’* இது குறித்த விரிவான தகவல்களைத் தருகிறது.

(அடுத்தவாரம் தொடரும்)

## கடிதங்கள்

வெல்லாவெளி – திவுலான வீதி:

### அறுவடைக்கு முன்னர் திருத்துமாறு கோரிக்கை

வெல்லாவெளி - திவுலான வீதி போக்குவரத்து செய்ய முடியாத, நிலையில் இருப்பதாக விவசாயிகள், பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றார்கள்.

மட்டக்களப்பு, வெல்லாவெளி பிரதேச செயலாளர் பிரிவையும் அம்பாறை, உகனை பிரதேச செயலாளர் பிரிவையும் இணைக்கும் வெல்லாவெளி - திவுலானை வீதி, கனரக வாகனங்களின் செயற்பாடு காரணமாக சேதமடைந்துள்ளது.

10 கிலோ மீற்றர் நீளமான வீதி, வீதி அபிவிருத்தி திணைக்களத்துக்கு சொந்தமானதாகும். மட்டக்களப்பை மையப்படுத்திய போக்குவரத்தில் ஈடுபடும் வாகனங்கள் இவ்வீதியால் பயணித்து அம்பாறை -கண்டி வீதியில் இணைந்து கொழும்புக்கான பயணத்தை மேற்கொள்ள முடியும். 2010ஆண்டு, குறித்த வீதியானது யப்பான் ஜெய்க்கா நிறுவனத்தால் மீள் புனரமைப்பு செய்யப்பட்டது.

எதிர்வரும் மாதங்களில் வேளாண்மை அறுவடை செய்யப்படவுள்ளதால் வீதியை புனரமைப்பு செய்வதற்கு துரித நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றார்கள்.

(க. விஜயரெத்தினம் )



திருவாரூர்

ஸ்டேன் சுவாமி விவகாரம்:

# அரசாங்கத்தைக் கண்டித்து ஆர்ப்பாட்டம்

திருவாரூர் மாவட்டம் மன்னார்குடியில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் சார்பில் சமூக செயற்பாட்டாளரும் கைது செய்யப்பட்டு சிறையில் இருந்த ஸ்டேன் சுவாமிக்கு உரிய மருத்துவ சிகிச்சை அளிக்காததால் மரணமடைந்தார் எனக் கூறி, இதற்கு காரணமான மத்திய அரசாங்கத்தைக் கண்டித்து வியாழக்கிழமை ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

திருச்சி மாவட்டம் விரகாவலூரை சொந்த ஊராக கொண்டவர் ஸ்டேன் சுவாமி(84). நீண்ட காலத்துக்கு முன்பே ஜார்காண்ட் மாநிலத்துக்குச் சென்று கிறிஸ்துவப் பாதிரியாராக இருந்ததுடன் அந்த மாநிலத்தில் உள்ள பழங்குடியினர் பிரச்சினைகளுக்காகவும் அவர்களின் உரிமைகளுக்காகவும் பல்வேறு போராட்டங்களை நடத்தி வந்ததுடன் சமூக செயற்பாட்டாளராகவும் இருந்து வந்தார்.ஸ்டேன் சுவாமி மீது உள்ள சில வழக்குகளுக்காக சென்ற ஆண்டு கைது செய்து சிறையில் அடைத்தனர்.

இவருக்கு, தீவிர மருத்துவ சிகிச்சை அளித்தும் மாரடைப்பு ஏற்பட்டு உயிரிழந்துள்ளார்.



சமூக செயற்பாட்டாளர் ஸ்டேன் சுவாமிக்கு உயர் சிகிச்சை அளிக்க வசதியாக அவரை பிணையில் விடுதலை செய்ய அனுமதி மறுத்ததுடன் அவரது உயிரைக் காப்பாற்றாமல் அலட்சியப் போக்குடன் நடந்துகொண்ட மத்திய அரசாங்கத்தைக் கண்டித்தும்; முக்கிய கோரிக்கையான பழங்குடியினர் கிராமப் பஞ்சாயத்து விரிவாக்க சட்டத்தை மத்திய அரசாங்கம் உடனடியாக அமுல்படுத்திட வலியுறுத்தியும் ஆரப்பாட்டம் நடைபெற்றது.

தூத்துக்குடி

# இரண்டு வருடங்களுக்குப் பின் மனைவி,பிள்ளைகள் மீட்பு

கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்பு திருச்செந்தூரில் குழந்தையுடன் தனியாக சுற்றித்திரிந்த கர்ப்பிணிப் பெண், சமூக நலத்துறை மூலம் மீட்கப்பட்டார்.

தூத்துக்குடி மாவட்ட சமூக நலத்துறையின் ஒருங்கிணைந்த சேவை மையத்தின் மூலம் குறித்த பெண்ணுக்கு, மனநல ஆலோசனைகள் தொடர்ந்து வழங்கப்பட்டன. இதன்மூலம் சுயநினைவு திரும்பிய அவர் தன்னைப் பற்றிய விவரங்களைத் தெரிவித்தார். அவரது கணவர் உசோகொய் என்பதும், அவர் ஒடிஸா மாநிலம் போலாங்கி மாவட்டத்தை சேர்ந்தவர் என்பதும் தெரியவந்தது. ஒடிஸா மாநில பொலிஸாரின் உதவியுடன் அவர் கண்டறியப்பட்டார்.



பெண்ணின் கணவரை தூத்துக்குடி ஆட்சியர் அலுவலகத்துக்கு அழைத்து வந்தனர். அவரிடம், மனைவி மற்றும் குழந்தைகளை, தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் ஒப்படைத்தார். இந்த மகிழ்ச்சியைக் கொண்டாடும் வகையில் கேக் வெட்டப்பட்டது.

புதுடெல்லி

# அமைச்சரவையில் 11 பெண்கள்

மத்திய அமைச்சரவையில் பெண் அமைச்சர்கள் எண்ணிக்கை, 11 ஆக அதிகரித்துள்ளது. மத்திய அமைச்சரவையில், அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்களாக நிர்மலா சீதாராமன், ஸ்மிருதி இரானி, இணை அமைச்சர்களாக, சாத்வி நிரஞ்சன் ஜோதி, ரேணுகா சிங் என, நான்கு பெண் அமைச்சர்கள் உள்ளனர்.

இந்நிலையில், நடைபெற்ற மத்திய அமைச்சரவை விரிவாக்கத்தில், மீனாட்சி லேகி, ஷோபா கரன்ட்லஜே, அனுப்பிரியா சிங் படேல், தர்ஷனா விக்ரம் ஜர்தோஷ், அன்னப்பூர்ணா தேவி, பிரதிமா பௌமிக், டொக்டர் பாரதி பிரவீன் பவார் மற்றும் அப்னா தளத்தை சேர்ந்த அனுப்பிரியா சிங் படேல் என, ஏழு பெண் அமைச்சர்கள் பதவியேற்றனர்.



இதையடுத்து, மத்திய அமைச்சரவையில் பெண் அமைச்சர்களின் எண்ணிக்கை, 11 ஆக உயர்ந்தது. பதவியேற்ற ஏழு பெண் அமைச்சர்களும், இணை அமைச்சர்களாக பதவியேற்றனர். இவர்களில், அன்னப்பூர்ணா தேவி, பாரதி பிரவீன் பவார், பிரதிமா பவுமிக் ஆகியோர், முதல் முறை எம்.பி.,க்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

கோவை

# முகநூல் பெண்ணின் அட்டகாசம்

முகநூலில் பழகி இளைஞரிடம் பண வேட்டையில் ஈடுபட்ட பெண் உட்பட இரண்டு பேர் கோவை பொலிஸாரிடம் சிக்கியுள்ளனர். கைதான பெண், தனது நண்பர்களுடன் இணைந்து ஆண் நண்பரை வர வைத்து மிரட்டிப் பணத்தைப் பிடுங்கி துரத்தி அனுப்பி இருப்பது விசாரணை மூலம் தெரிய வந்துள்ளது.

கோவை மாவட்டம், தடாகம் பொலிஸ் நிலைய எல்லைக்குட்பட்ட ஒரே பாடசாலையில் பயின்ற நண்பர்களான ஆண், பெண் இருவரும் தற்போது முகநூல் மூலம் பழகி வந்துள்ளனர். அந்த வாலிபர் திருமணம் ஆனவர்.

இந்நிலையில் அவசர செலவுக்கு அந்த பெண் அவ்வாலிபரிடம் ரூபாய் 23,000த்தை பெற்றுள்ளார். மேலும் இருவரும் முகநூலில் தங்களது புகைப்படங்களை பரிமாற்றம் செய்தும் ,பேசியும் வந்துள்ளனர்.

இந்நிலையில் அந்த இளம் பெண், வாலிபரை தனியாக சந்திப்பதற்காக ஆனைக்கட்டியில் நண்பனை அழைத்து சென்றுள்ளார். அங்கு அந்தப் பெண், தனது ஆண் நண்பர்கள் இருவரை ஆயுதங்களுடன் வரவழைத்துள்ளார்.



மூவரும் சேர்ந்து அந்த வாலிபரிடம் பணம் கேட்டு மிரட்டியுள்ளனர். வாலிபர் அவரிடம் அப்போது இருந்த பணத்தை கொடுத்துவிட்டு மீதித் தொகையை இரண்டு நாள் கழித்து கொடுப்பதாகக் கூறி வீடு திரும்பியுள்ளார். இது குறித்து அளித்த புகாரில், வழக்கு பதிவு செய்த பொலிஸார் பணம் பறித்த அந்தப் பெண்ணையும், அவரது கூட்டாளிகள் இருவரையும் கைது செய்து சிறையில் அடைத்தனர்.

இந்தியா

முதலமைச்சர் ஸ்டாலின்

# இணையமைச்சருக்கு வாழ்த்து தெரிவிப்பு



மத்திய இணையமைச்சராக பதவியேற்றுள்ள எல். முருகனுக்கு தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

பிரதமர் மோடி தலைமையிலான மத்திய அமைச்சரவை விரிவாக்கம் மற்றும் பதவியேற்பு விழா நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இதில் 7 பெண் அமைச்சர்கள் உட்பட 43 பேர் அமைச்சராகப் பொறுப்பேற்றனர்.

**“ தமிழக அரசியல் தலைவர்கள் பலரும் வாழ்த்து தெரிவித்து வரும் நிலையில் முதல்வரும், திமுக தலைவருமான மு.க.ஸ்டாலின் வாழ்த்து தெரிவித்துள்ளார்**

இதில், தமிழக பாரதிய ஜனதா கட்சித் தலைவராக இருந்த எல். முருகனுக்கு அமைச்சரவையில் இடமளிக்கப்பட்டுள்ளது.ஊடகம் ,மீன்வளம், கால்நடைத்துறை மற்றும் பால்வளத்துறை ஒதுக்கப்பட்டுள்ளன.

மத்திய இணையமைச்சராகப் பொறுப்பேற்றுள்ள எல். முருகனுக்கு தமிழக அரசியல் தலைவர்கள் பலரும் வாழ்த்து தெரிவித்து வரும் நிலையில் முதல்வரும், திமுக தலைவருமான மு.க.ஸ்டாலின் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

சென்னை

# ‘இவருக்கா இந்தப் பதவி’



பெண்களை இழிவுபடுத்திப் பேசும் திண்டுக்கல் ஐ. லியோனிக்கு தமிழக பாடநூல் கழகத் தலைவர் பதவி கொடுக்கப்பட்டுள்ளதற்கு பாட்டாளி மக்கள் கட்சி (பா.ம.க.) இளைஞரணி தலைவரும் ராஜ்யசபா எம்.பி.யுமான அன்புமணி ராமதாஸ் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அன்புமணி ராமதாஸ் வெளியிட்டுள்ள பதிவில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

தமிழ்நாடு பாடநூல் நிறுவனம் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தின் தலைவராக திண்டுக்கல் ஐ.லியோனி நியமிக்கப்பட்டிருக் கிறார். பெண்களை இழிவுப்படுத்தி பேசுவதையே பிழைப்பாகக் கொண்ட ஒருவரை இந்த பதவியில் அமர்த்துவதை விட, அப்பதவியை மோசமாக அவமதிக்க முடியாது!

பெண்களின் இடுப்பு, மடிப்பு பற்றி பேசுபவருக்கு படிப்பு பற்றி என்ன தெரியும்? பாடநூல் நிறுவனத்தின் பணி அறிவை வளர்க்கும் பாடநூல்களைத் தயாரிப்பதாகும். லியோனி தலைமையில் தயாரிக்கப்படும் பாடநூல்களை படிக்கும் மாணவர்களின் கதி என்னவாகும்?. இவ்வாறு அன்புமணி ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

Saegis கம்பஸ் Pearson உடனான

# பங்காண்மை விஸ்தரிப்பு

நுகேகொட பகுதியில் அமைந்துள்ள உயர் கல்விச் சேவைகளை வழங்கும் கல்வியகங்களில் ஒன்றான Saegis கம்பஸ், சர்வதேச ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்ட BTEC HNDs in Business, Computing மற்றும் Engineering கற்கைத் தெரிவுகளை மாணவர்களுக்கு வழங்கும் வகையில் Pearson உடனான தமது பங்காண்மையை மேலும் வலுப்படுத்தியுள்ளது.

தொழில் வழங்குநர்களால் இந்த கற்கைகள் அதிகளவு ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளதுடன், கற்கையை தொடரும் காலப்பகுதியில் மாணவர்களுக்கு பிரயோக அனுபவங்களை பெற்றுக் கொடுக்கும் வகையிலும் அமைந்துள்ளது.

சர்வதேச ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்ட நிபுணத்துவ தகைமையாக இது அமைந்திருப்பதுடன், பட்டப்படிப்பைத் தொடரும் மாணவரின் முதல் மற்றும் இரண்டாம் ஆண்டு கற்கைக் காலப்பகுதிக்கு நிகரானதாக அமைந்திருப்பதுடன், அவர்கள் தெரிவு செய்த பட்டப்படிப்பின் இறுதியாண்டுக்கு நேரடி அனுமதியை வழங்கும் வகையில் அமைந்துள்ளது.




Saegis கம்பஸ் உபவேந்தர் பேராசிரியர். நாலக ஜயகொடி கருத்துத் தெரிவிக்கையில், “Pearson உடன் கைகோர்த்து பெருமைக்குரிய BTEC HNDs களை வழங்க முடிந்துள்ளதையிட்டு நாம் மகிழ்ச்சியடைகின்றோம். மாணவர்களுக்கு அவர்கள் தெரிவு செய்த துறையில் முன்னேறுவதற்கு அவசியமான அறிவையும் திறன்களையும் வழங்குவதுடன், அவர்களின் ஆளுமை, புலமை மற்றும் தேர்ச்சிகளுக்கு நேர்த்தியான வகையில் பங்களிப்பு வழங்கும் வகையிலும் இந்த கற்கைகள் அமைந்திருப்பதாக நாம் நம்புகின்றோம். எதிர்காலத்திலும் எமது பங்காண்மைகள் மற்றும் கைகோர்ப்புகளை விரிவாக்கம் செய்வதற்கு நாம் எதிர்பார்க்கின்றோம்.” என்றார்.

நிர்வாகம், கணக்கீடு மற்றும் நிதியியல், மற்றும் சந்தைப்படுத்தல் போன்ற பிரிவுகளில் HND in Business அல்லது Software Engineering, Network Engineering மற்றும் Data Analytics போன்ற பிரிவுகளில் HND in Computing ஐ மாணவர்கள் தெரிவு செய்ய முடியும். Saegis கம்பஸினால் எதிர்காலத்தில் HND in Quantity Surveying கற்கையை வழங்குவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

Saegis கம்பஸைச் சேர்ந்த நிர்வாகிகள் மற்றும் விரிவுரையாளர்கள் கல்வித் துறையில் காணப்படும் புகழ்பெற்ற அடையாளங்களாக அமைந்திருப்பதுடன், தமது துறைகளில் ஒப்பற்ற அனுபவத்தையும் கீர்த்தி நாமத்தையும் கொண்டுள்ளனர்.

Saegis கம்பஸ் கல்வி விவகாரங்களுக்கான பணிப்பாளர் பேராசிரியர் தர்மரட்ன கருத்துத் தெரிவிக்கையில், “மாணவர்களை கல்வியிலும் நிபுணத்துவம் வாய்ந்த பிரிவிலும் உயர்ந்த நிலைக்கு செல்வதற்கு வழிகோலும் மற்றுமொரு முக்கியத்துவம் வாய்ந்த மைல்கல்லாக இது அமைந்துள்ளது. இலங்கையில் சிறந்த தரமான உயர் கல்வியை வழங்குவதில் நாம் நம்பிக்கை கொண்டுள்ளதுடன், எமது வழிமுறையில் இந்த நம்பிக்கை ஆழமாக இணைந்துள்ளது” என்றார்.

Saegis கம்பஸினால் வணிகத் துறையில் பிரித்தானியாவின், கன்டர்பரி கிறைஸ்ட் சேர்ச் பல்கலைக்கழகத்தின் பரந்தளவு பட்டப்படிப்புகள் வழங்கப்படுவதுடன், அதன் சொந்தக் கற்கைகளுக்கு இலங்கையின் உயர் கல்வி அமைச்சின் அனுமதி கிடைத்துள்ளது. Pearson இனால் உறுதியளிக்கப்பட்ட சான்றிதழ் மற்றும் டிப்ளோமா கற்கைகளும் வழங்கப்படுவதுடன், அவுஸ்திரேலியாவின் Deakin பல்கலைக்கழகத்தின் உயர் கல்விக் கற்கைளுக்கான வழிகாட்டல்களும் வழங்கப்படுகின்றன.

கம்பஸில் காணப்படும் நவீன வசதிகளில், நவீன தகவல் தொழில்நுட்ப ஆய்வுகூடம், மொழி ஆய்வுகூடம், நூலகம், ஓய்வு பகுதி, நவீன வசதிகளைக் கொண்ட இடவசதி நிறைந்த குளிரூட்டப்பட்ட விரிவுரை அறைகள், விளையாட்டு மற்றும் பொழுது போக்கு பகுதிகள், அதிகளவு இடவசதி கொண்ட உணவகப் பகுதி போன்ற பல அம்சங்கள் அடங்கியுள்ளன.

மாணவர்களுக்கு தொழில் வாய்ப்புகள் மற்றும் தொழில் பயிற்சிகளைப் பெற்றுக் கொள்வதற்கான தொழில்நிலை வழிகாட்டல் அலகையும் கொண்டுள்ளதுடன், லியோ கழகம் மற்றும் ரொட்ராக்ட் கழகம் ஆகியவற்றையும் கொண்டுள்ளது.

செலான் வங்கியின்

# ‘பொறுப்பு வாய்ந்த வங்கியியல்’

செலான் வங்கி, நடமாட்டம் குறைந்த மற்றும் தனிமைப்படுத்தல் பேணப்படும் இந்தக் காலப்பகுதியில் நாடு முழுவதிலும் சௌகரியமான வங்கியியல் சேவைகளை வழங்கி வாடிக்கையாளர்களுக்கு முழுமையாக உதவிகளை வழங்க முன்வந்துள்ளது. வங்கியின் பன்நாளிகை வாடிக்கையாளர் உதவி ஹொட்லைன் இலக்கங்கள், இணைய வசதி மற்றும் மொபைல் வங்கியியல் கட்டமைப்புகள் போன்றன தமது வசிப்பிடங்களிலுள்ள வாடிக்கையாளர்களின் பிரத்தியேகமான தேவைகளை நிவர்த்தி செய்யும் வகையில் அமைந்துள்ளது.

உலகத் தொற்றுப் பரவல் நிலவும் காலப்பகுதி மற்றும் பொருளாதார உறுதியற்ற நிலை அதிகளவு காணப்படும் சூழலில் டிஜிட்டல் கட்டமைப்புக்கு மாறுபடலை மேற்கொள்ளும் வாடிக்கையாளர்களின் எதிர்பார்ப்பை புரிந்து கொண்டு, மீளமைக்கப்பட்ட தனது இணையத்தளத்தினூடாக வங்கியின் பலதரப்பட்ட வங்கிச் சேவைகள் ஒன்லைனில் வழங்க முன்வந்துள்ளது.




**“ வாடிக்கையாளர்களையும் வங்கியின் டிஜிட்டல் வங்கியியல் சேவையை பயன்படுத்துமாறு ஊக்குவிப்பதுடன், இந்த ஆபத்தான சூழலில் அநாவசியமான வெளிப்படுத்தல்களை தவிர்த்துக் கொள்ளுமாறும் அறிவுறுத்தியுள்ளது**

இதில் ஒன்லைன் பண மாற்றங்கள் மற்றும் ஒன்லைன் கட்டணப் பட்டியல் கொடுப்பனவுகள் போன்றனவும் அடங்கியுள்ளன. தடங்கல்களில்லாத வங்கியியல் மற்றும் நிதியியல் சேவைகளை பெற்றுக் கொடுப்பதற்கு தனது டிஜிட்டல் புத்தாக்கத்தை பெற்றுக் கொடுக்கும் வாக்குறுதியை வழங்கி, தற்போது முன்னெடுக்கப்படும் தேசிய முயற்சிகளுக்கு அவசியமான உதவிகளை வங்கி வழங்கும்.

இந்த நெருக்கடியான காலப்பகுதியில் வாடிக்கையாளர் தன்னிறைவு மற்றும் சௌகரியம் போன்றன தொடர்பில் செலான் வங்கி அதிகளவு கவனம் செலுத்தும். சுகாதார அதிகார அமைப்புகளால் வழங்கப்பட்ட கடுமையான சுகாதார வழிகாட்டல்கள் மற்றும் இலங்கை மத்திய வங்கியின் அத்தியாவசிய சேவைகள் எனும் பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள வழிகாட்டல்களின் பிரகாரம் நாடு முழுவதையும் சேர்ந்த தெரிவுசெய்யப்பட்ட கிளைகள் திறந்திருக்கும்.

சகல ஊழியர்கள் மற்றும் வாடிக்கையாளர்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில், சகல வாடிக்கையாளர்களையும் வங்கியின் டிஜிட்டல் வங்கியியல் சேவையை பயன்படுத்துமாறு ஊக்குவிப்பதுடன், இந்த ஆபத்தான சூழலில் அநாவசியமான வெளிப்படுத்தல்களை தவிர்த்துக் கொள்ளுமாறும் அறிவுறுத்தியுள்ளது.

ஈராக்

ஈராக், சிரியாவில்

# ஐ. அமெரிக்க படையினரை இலக்கு வைத்து தாக்குதல்கள்

ஈராக், சிரியாவில் உள்ள ஐக்கிய அமெரிக்க இராஜதந்திரிகள், படைகள் ஆகியோர் மூன்று றொக்கெட்டுகள், ட்ரோன் தாக்குதல்களுக்கு கடந்த 24 மணித்தியாலங்களில் உள்ளாகியுள்ளதாக ஐக்கிய அமெரிக்க, ஈராக்கிய அதிகாரிகள் நேற்று முன்தினம் தெரிவித்துள்ளனர்.

ஐக்கிய அமெரிக்கப் படைகளைக் கொண்டிருக்கின்ற ஈராக்கிய விமானத் தளம் ஒன்று மீது குறைந்தது 14 றொக்கெட்டுகள் தாக்கியதும் இதில் உள்ளடங்குகின்றது. இதில், இரண்டு ஐ. அமெரிக்க படையினர் காயமடைந்திருந்தனர்.



இத்தாக்குதல்களுக்கு உடனடியாக எவரும் உரிமை கோரவில்லை என்றபோதும், ஈரானிய ஆதரவு ஆயுதக் குழுக்களின் நடவடிக்கை என்றே இது நம்பப்படுகிறது.


இதேவேளை, ஈராக் தலைநகர் பக்தாத்தின் பச்சை வலயத்துக்குள் உள்ள ஐ. அமெரிக்க தூதரகம் மீது நேற்று அதிகாலையில் இரண்டு றொக்கெட்டுகள் ஏவப்பட்டதாக ஈராகிய பாதுகாப்புத் தகவல் மூலங்கள் தெரிவித்துள்ளன.

சிரியாவில் ஈராக்குடனான எல்லை உள்ள கிழக்குப் பகுதியிலுள்ள அல் ஓமர் எண்ணெய் வயலின் மீதான ட்ரோன் தாக்குதல் ஒன்றில் எதுவித சேதமும் இல்லை என ஐ. அமெரிக்காவால் ஆதரவளிக்கப்படும் சிரிய ஜனநாயகப் படைகள் தெரிவித்துள்ளன.

ஐ.அ. அமீரகம்

டுபாயின் ஜபல் அலி துறைமுகத்தில்

## 'கப்பலில் தீ கட்டுப்பாட்டில் கொண்டு வரப்பட்டது'



ஐக்கிய அரபு அமீரகத்தின் டுபாயின் ஜபல் அலி துறைமுகத்திலுள்ள கப்பல் ஒன்றில், வெடிப்பு ஒன்றால் ஏற்பட்ட தீயானது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டதாக, டுபாய் ஊடக அலுவலகம் நேற்று முன்தினம் தெரிவித்துள்ளது.

தீப்பற்றக்கூடிய பொருள்களைக் கொண்டிருந்த கொள்கலன் ஒன்றில் ஏற்பட்ட வெடிப்பானது வழமையான சம்பவம் ஒன்று என ஊடக அலுவலகத்தின் பணிப்பாளர் நாயகம் மொனா அல் மரி தெரிவித்துள்ளார்.


துறைமுகத்திலிருந்து 15 கிலோ மீற்றர் தூரத்திலிருந்து 22 கிலோ மீற்றர் தூரம் வரையிலான வசிப்பிடப் பகுதியிலுள்ளோர் குறித்த வெடிப்பின் சத்தத்தைக் கேட்டுள்ளனர்.

இந்நிலையில், எதுவித உயிரிழப்புகளோ அல்லது காயங்களோ ஏற்படவில்லை என அறிக்கை ஒன்றில் ஊடக அலுவலகம் தெரிவித்துள்ளது.

எகிப்து

ஒப்பந்தம் கைச்சாதானமையை அடுத்து

## சுயஸ் கால்வாயை முடக்கிய கப்பல்




சுயஸ் கால்வாயை இவ்வாண்டு மார்ச் மாதத்தில் முடக்கிய பாரிய கொள்கலன் கப்பலொன்றானது இறுதியாக சுயஸ் கால்வாயை விட்டு வெளியேறுகின்றது.

**" இரகசியம் பேணுவதற்காக 550 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்களை எகிப்து கோரியிருந்தது.**

கப்பலின் உரிமையாளர்கள், காப்புறுதியாளர்களுடன் இழப்பீட்டு ஒப்பந்தம் ஒன்றை எகிப்து கைச்சாத்திட்டத்தையடுத்தே குறித்த கப்பல் வெளியேறுகிறது.


கப்பலானது மூன்று மாதங்களாக கால்வாய் நகரமான இஸ்மைலியா நகரத்துக்கு அருகில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது.

ஒப்பந்தத்தின் விபரங்கள் வெளிப்படுத்தப்பட்டிருக்காத நிலையில், 550 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்களை எகிப்து கோரியிருந்தது.

லித்துவேனியா

அகதிகளின் வருகையைக் குறைக்க

## பெலாரஸ் எல்லையில் வேலிக்கு திட்டமிடும் லித்துவேனியா



பெலாரஸுடனான எல்லையில் வேலி ஒன்றை அமைக்கப் போவதாகவும், படைகளைத் தரையிறக்கப் போவதாகவும் லித்துவேனியா அறிவித்துள்ளது.


தமது பிராந்தியத்துக்குள் சட்டரீதியற்ற முறையில் அகதிகள் கடப்பதைத் தடுப்பதற்காகவே இவ்வாறு செய்யவுள்ளதாக லித்துவேனியா அறிவித்துள்ளது.

கடந்த மாதம் முதலாம் திகதி முதல் 679 கிலோ மீற்றர் நீளமான எல்ல்லையைக் கடந்தமைக்காக 1,000க்கும் மேற்பட்ட அகதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக லித்துவேனியப் பிரதமர் இன்கிறிடா சிமோனைட் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, வெளிநாட்டு அகதிகளை விமானத்தில் கொண்டு வந்து அவர்களை எல்லைகளைக் கடக்க அனுமதிப்பதாகவும் பெலாரஸை ஐரோப்பிய ஒன்றிய அங்கத்துவ நாடான லித்துவேனியா குற்றஞ்சாட்டியுள்ளது.

ஒஸ்திரியா

## கழிவறையில் பாம்பால் கடியுண்ட நபர்



ஒஸ்திரியாவிலுள்ள நபரொருவர் கழிவறையைப் பயன்படுத்தும்போது ஐந்து அடி நீளமுள்ள மலைப் பாம்பொன்றால் கடிக்கப்பட்டுள்ளார். '

பாம்பு கடித்த பின்னரே பாம்பை குறித்த நபர் கண்டுள்ளார். பாம்பானது குறித்த நபர் அயலவரின் அடுக்குமாடிக் குடியிருப்பிலிருந்து தப்பித்துள்ளது. அங்கு 11 பாம்புகள் வைக்கப்பட்டிருந்துள்ள

யூரோ கிண்ணத் தொடர்:

# இறுதிப் போட்டியில் இங்கிலாந்து

யூரோ கிண்ணத் தொடரின் இறுதிப் போட்டிக்கு இங்கிலாந்து தகுதி பெற்று ள்ளது.




வெம்ப்ளியில் நேற்று அதிகாலை நடைபெற்ற டென்மார்க்குடனான அரையிறுதிப் போட்டியில் வென்றமையைத் தொடர்ந்தே இறுதிப் போட்டிக்கு இங்கிலாந்து தகுதி பெற்றுள்ளது.

இப்போட்டியின் 30ஆவது நிமிடத்தில் டென்மார்க்கின் முன்களவீரர் மிக்கேல் டம்ஸ்கார்ட் பிறீ கிக் மூலம் பெற்ற கோலின் மூலம் டென்மார்க் முதலில் முன்னிலை பெற்றிருந்தது.

பின்னர் இங்கிலாந்தின் முன்களவீரர் ரஹீம் ஸ்டேர்லிங்கின் கோல் கம்பத்தை நோக்கிய உதையை டென்மார்க்கின் கோல் காப்பாளர் கஸ்பர் ஷ்மைக்கல் தடுத்தபோதும், ஸ்டேர்லிங்கை நோக்கி இன்னொரு இங்கிலாந்து முன்களவீரரான புகாயோ ஸாகா செலுத்திய பந்தை தடுக்க முயன்ற டென்மார்க்கின் பின்களவீரர் சிமோன் கெயரின் காலில் பட்டு பந்து கோல் கம்பத்துக்குள் செல்ல கோலெண்ணிக்கையை இங்கிலாந்து சமப்படுத்தியது.

பின்னர் வழமைய நேர முடிவு வரை மேலதிக கோலெதுவும் பெறப்படாத நிலையில், இங்கிலாந்தின் பின்களவீரர் ஹரி மக்குவாயா கோல் கம்பத்தை நோக்கிச் செலுத்திய பந்து உள்ளடங்லகாக பல தடுப்புக்களை ஷ்மைக்கல் மேற்கொண்டிருந்தார்.

இந்நிலையில், மேலதிக நேரத்தில் ஸ்டேர்லிங் பெனால்டி பகுதிக்குள் மெதுவான தொடுகையுடன் வீழ்ந்த நிலையில், பெனால்டி வழங்கப்பட்டது. அந்தவகஇயில், இங்கிலாந்தின் முன்களவீரர் ஹரி கேன் செலுத்திய பெனால்டியை ஷ்மைக்கல் தடுத்தபோதும், அது மீண்டும் கேனிடம் செல்ல அவர் அதைக் கோலாக்கியதோடு இறுதியில் 2-1 என்ற கோல் கணக்கில் இங்கிலாந்து வென்றது.

பந்துவீச்சாளர்களுக்கான தரவரிசையில்

## மூன்றாமிடத்துக்கு முன்னேறிய வோக்ஸ்



சர்வதேச கிரிக்கெட் சபையின் ஒருநாள் சர்வதேசப் போட்டிகளுக்கான பந்துவீச்சாளர்களின் தரவரிசையில் மூன்றாமிடத்துக்கு இங்கிலாந்தின் வேகப்பந்துவீச்சாளர் கிறிஸ் வோக்ஸ் முன்னேறியுள்ளார்.

இலங்கைக்கு எதிரான தொடரின் ஆறு விக்கெட்டுகளைக் கைப்பற்றியதையடுத்தே, ஏழாமிடத்திலிருந்து நான்கு இடங்கள் முன்னேறி மூன்றாமிடத்தை அடைந்துள்ளார்.

முதல் 10 பந்துவீச்சாளர்களின் தரவரிசை பின்வருமாறு,

1. ட்ரெண்ட் போல்ட், 2. மெஹிடி ஹஸன் மிராஸ், 3. கிறிஸ் வோக்ஸ், 4. முஜீப் உர் ரஹ்மான், 5. மற் ஹென்றி, 6. ஜஸ்பிரிட் பும்ரா, 7. ககிஸோ றபாடா, 8. ஜொஷ் ஹேசில்வூட், 9. பற் கமின்ஸ், 10. முஸ்தபிசூர் ரஹ்மான்.

இதேவேளை, சகலதுறை வீரர்களுக்கான தரவரிசையிலும், நான்காமிடத்திலிருந்து ஓரிடம் முன்னேறி மூன்றாமிடத்தை வோக்ஸ் அடைந்துள்ளார்.

1. ஷகிப் அல் ஹஸன், 2. மொஹமட் நபி, 3. கிறிஸ் வோக்ஸ், 4. பென் ஸ்டோக்ஸ், 5. ரஷீட் கான்.

முதல் 10 துடுப்பாட்டவீரர்களின் தரவரிசை பின்வருமாறு,

1. பாபர் அஸாம், 2. விராட் கோலி, 3. ரோஹித் ஷர்மா, 4. றொஸ் டெய்லர், 5. ஆரோன் பின்ஞ், 6. ஜொனி பெயார்ஸ்டோ, 7. பக்கர் ஸமன், பப் டு பிளெஸி, 9. டேவிட் வோணர், ஷே ஹோப்.

இந்நிலையில், தென்னாபிரிக்காவுக்கு எதிரான இறுதி மூன்று இருபதுக்கு 20 சர்வதேசப் போட்டிகளிலும் 86 ஓட்டங்களைப் பெற்ற எவின் லூயிஸ், துடுப்பாட்டவீரர்களின் தரவரிசையில் 10ஆம் இடத்திலிருந்து ஒன்பதாமிடத்துக்கு முன்னேறியுள்ளார்.

முதல் 10 துடுப்பாட்டவீரர்களின் தரவரிசை பின்வருமாறு,

1. டேவிட் மலன், 2. ஆரோன் பின்ஞ், 3. பாபர் அஸாம், 4. டெவோன் கொன்வே, 5. விராட் கோலி, 6. லோகேஷ் ராகுல், 7. கிளென் மக்ஸ்வெல், 8. றஸி வான் டர் டுஸன், 9. எவின் லூயிஸ், 10. மார்டின் கப்தில்.

முதல் 10 பந்துவீச்சாளர்களின் தரவரிசை பின்வருமாறு,

1. தப்ரையாஸ் ஷம்சி, 2. ரஷீட் கான், 3. அஸ்தன் அகர், 4. அடில் ரஷீட், 5. வனிடு ஹஸரங்க, 6. முஜீப் உர் ரஹ்மான், 7. டிம் சௌதி, 8. அடம் ஸாம்பா, 9. இஷ் சோதி, 10. மிற்செல் சான்ட்னெர்.

முதல் ஐந்து சகலதுறைவீரர்களின் தரவரிசை பின்வருமாறு,

1. மொஹமட் நபி, 2. ஷகிப் அல் ஹஸன், 3. கிளென் மக்ஸ்வெல், 4. றிச்சர்ட் பெரிங்டன், 5. கரெத் டெலனி.

விம்பிள்டன் டென்னிஸ் தொடர்:

## வெளியேற்றப்பட்ட பெடரர்



பிரித்தானியத் தலைநகர் இலண்டனில் நடைபெற்று வரும் விம்பிள்டன் டென்னிஸ் தொடரிலிருந்து உலகின் எட்டாம் நிலை வீரரான றொஜர் பெடரர் வெளியேற்றப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற போலந்தின் ஹுபேர்ட் ஹுர்க்கச்சுடனான காலிறுதிப் போட்டியில் 3-6, 6-7 (4-7), 0-6 என்ற நேர் செட்களில் தோல்வியடைந்தே தொடரிலிருந்து சுவிற்ஸர்லாந்தின் பெடரர் வெளியேறியிருந்தார்.

மேற்கிந்தியத் தீவுகள் எதிர் அவுஸ்திரேலியா:

## நாளை இருபதுக்கு 20 தொடர் ஆரம்பிக்கிறது



மேற்கிந்தியத் தீவுகள், அவுஸ்திரேலிய அணிகளுக்கு இடையிலான ஐந்து போட்டிகள் கொண்ட இருபதுக்கு 20 சர்வதேசப் போட்டித் தொடரானது, சென். லூசியாவில் இலங்கை நேரப்படி நாளை அதிகாலை ஐந்து மணிக்கு ஆரம்பிக்கவுள்ள முதலாவது போட்டியுடன் ஆரம்பிக்கின்றது.

சர்வதேச கிரிக்கெட் சபையின் இருபதுக்கு -20 உலகக் கிண்ணத் தொடருக்கு இன்னும் சில மாதங்களே இருக்கின்ற நிலையில், இரண்டு அணிகளும் வெவ்வேறு நோக்கங்களுடன் இத்தொடரில் களம் புகுகின்றன.

மேற்கிந்தியத் தீவுகளைப் பொறுத்த வரையில் அணித்தலைவர் கெரான் பொலார்ட், கிறிஸ் கெய்ல், அன்ட்ரே ரஸல், டுவைன் பிராவோ என அனைத்து நட்சத்திர வீரர்களும் தற்போது அணியில் உள்ளனர்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வெள்ளிக்கிழமை, 9 ஜூலை 2021, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு 02 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.